# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே..........

- இம்மாதம் உங்களுக்கு எப்படி?
- எண் சோதிடப்படி 1986 இல் உங்கள் பலாபலன்
- இனப்பிரச்சினையும், அமைதியும்
- வால்வெள்ளியின் தோற்றமும், அதன் பலாபலன்களும்
- அதிஷ்ட எண் ஞானம்
- வானியற் காட்சிகள்
- குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல.

* * *

குரோதன ஹூ மார்கழி மீ

(16-12-85—14-1-86)

விலை ரூபா: 3-00



சஞ்சலமுற்றோருக்கு வழிகாட்டுவது சோதிடமலர்

உ


# சோதிடமலர்

SOTHIDA MALAR

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

குரோதன ஷு மார்கழி மீ

( 16 - 12 - 85 )

மலர் 8 | இதழ் 9


## சிவதாண்டவ ஸ்தோத்திரம்

கதாநிலிம்ப நிர்ஜரீ நிகுஞ்ச கோடரேவசன்
விமுக்த துர்மதிஸ்சதா சிரஸ்த மஞ்சலிம்வஹன்
விலோல லோல லோசனு லலாம பாலலக்னகம்
சிவேதி மந்த்ர முச்சரன்சதா சுகிபவாம் யஹம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

## திருவெம்பாவைத் தினம்

மார்கழிமாத திருவாதிரை நட்சத்திர தினத்திற்கு முன் ஒன்பது தினங்களிலும் நடைபெறும் இவ்விசேடம் ஆதிரை நாள் எனும் திருவாதிரைப் புண்ணிய தினத்துடன் பூர்த்தியாகிறது. தேவகாலமாகும் புலரிக்காலப் பூஜையின்போது தேவர்களின் இராக்கால முடிவாகிய மார்கழி மாதத்தில் இளம் பெண்கள் பூம்புனலாடி இறைவனைச் சக்தி வடிவமாக வியந்து பாடியாடுவதே எம்பாவை நோன்பாகும். சீதப்புனல் ஆடிச் சிற்றம்பலம்பாடி வேதப்பொருள் பாடி அப்பொருளாமாபாடி சோதி திறம்பாடி இறைவனின் பாதத் திறம்பாடி ஆடுவதே எம்பாவாய் கூற்று.

## திரிபுர தகனம்

சத்வம், ரஜஸ், தமஸ் என்பன முக்குணங்கள். இவை பிரபஞ்சத்தில் அடங்குகின்றன. பிரபஞ்சத்திற்கப்பாற்பட்ட பரம்பொருளையடைவதற்கு யோகத்தை அனுஷ்டிப்பதே சிறந்த வழியாகும்.

லாபநஷ்டம், வெற்றி தோல்வி, சுகதுக்கம் இவற்றில் மனம் ஊசலாடாது அமைதி கொள்வதே யோகசாதனமாகும். பிரபஞ்சப் பொருட்களை அனுபவிப்பதற்கு யோகம் என்றும், அவைகளைக் காப்பாற்றி வைப்பதற்குச் க்ஷேமம் எனவும் அழைக்கப்படுகிறது. சுவாசிப்பதற்கு காற்று தானாகவந்து அமைவது போல உடலிலிருக்கும் வரை உடலுக்குத் தேவையானவை இறையனுக்கிரகத்தால் ஒருவனுக்கு (பக்தனுக்கு)த் தானே வந்தமைகின்றது. இவ்விதம் யோகக்ஷேமத்தை மட்டும் எண்ணாது ஆத்ம சாதனையிலேயே பக்தனின் மனம் ஈடுபடுவது சிறந்தது. மனம் இப்படி ஈடுபடும் செயல் எவனுக்குக் கைகூடுகின்றதோ அவனே முக்குணங்களையும் கடக்க வல்லவனாகின்ருன். இதுவே (முப்புர) திரிபுரதகனம் எனக்கூறப்படுகிறது.

## ஆதிரை நாள்

இடதுபாதம் தூக்கியாடும் தாண்டவமூர்த்தியின் தாண்டவதர்சனத்தைக் கொடுக்கும் சிறப்பு திருவாதிரை நாளுக்குரியதாகும். இத்தினம் அதிகாலைக்குமுன் நடராஜமூர்த்தி அபிஷேகத் திரவியங்களால் குளிர்ச்சிபெற்று, தன்தேவியோடு தனது திருநடனக்காட்சியை உதயத்தின்போது பக்தர்களுக்கு அருளோடு நல்குவர். பக்தர்கள் அவ்வமயம் இறைவனுக்கு நிவேதனப் பொருட்கள் பலவுமளித்து நெய்விளக்கேற்றி வழிபாடு ஆற்றி அருட்பிரசாதம் பெற்று இன்புடன் வாழ்வார்களாக!!

---

மணியையடிக்கும்போது அடுத்தடுத்து வரும் அதன் ஒவ்வொரு ஓசையும் தனித்தனி உருவமுடையது போலத் தோன்றும்: ஆனல் அடிப்பதை நிறுத்தினல் ஓசை சிறிது நேரம் வரையில் கேட்டுப் பின் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விடுகின்றது: அப்போது தெளிவற்ற சப்தமோ உருவமில்லாதது போலத் தோன்றுகிறது. இம் மணியோசையைப் போலவே இறைவன் உருவமுடையவனும் உருவமற்றவனும் காட்சியளிக்கிருன்.

# நாள் எப்படி?

மார் 1 திங் (16-12-85) பஞ்சமி மாலை 6-12 வரை. அவிட்டம் பி.இ. 4-56 வரை. சித்தம், முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-52—9-22

மார் 2 செவ் (17-12-85) ஷஷ்டி மாலை 6-26 வரை சதயம் பி.இ. 5-41 வரை, மரணம், விநாயகஷஷ்டி விரதம். அசுபதினம். ராகு 3-22—4-52

மார் 3 புதன் (18-12-85) ஸப்தமி-சித்தம் மாலை 6-18 வரை. பூரட்டாதி முழுவதும். திருவெம்பாவை பூஜாரம்பம், சுபதினமன்று. ராகு 12-23—1-53

மார் 4 வியா (19-12-85) அஷ்டமி இரவு 8-18 வ. பூரட்டாதி காலை 7-14 வரை. சித்தம். சுபதினமல்ல. ராகு 1-54—3-24

மார் 5 வெள் (20-12-85) நவமி இரவு 10-24 வ. உத்தரட்டாதி காலை 9-33 வரை, சித்தம் அசுபதினம். ராகு 10-54—12-54

மார் 6 சனி (21-12-85) தசமி பி.இ. 12-57 வரை. ரேவதி-மரணம் பகல் 12-19 வரை. கரிநாள். சுபகருமங்களை விலக்குக. ராகு 9-25—10-55

மார் 7 ஞாயி (22-12-85) ஏகாதசி பி.இ 3-43 வரை. அசுவினி-சித்தம் பகல் 3-25 வரை. ஸர்வவைகுண்ட ஏகாதசி பகல் 3-25க்கு முன் அவசியகருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 4-55—6-25

மார் 8 திங் (23-12-85) துவாதசி முழுவதும், பரணி-சித்தம் மாலை 6-35 வரை, அசுபதினம். ராகு 7-56—9-26

மார் 9 செவ் (24-12-85) துவாதசி காலை 6-28 வ. கார்த்திகை இரவு 9-39 வரை, சித்தாமிர்தம். பிரதோஷவிரதம், கார்த்திகை விரதம், கரிநாள். சுபகருமங்களை விலக்குக. ராகு 3-26—4-56

மார் 10 புத (25-12-85) திரயோதசி காலை 9-00 வ. ரோகிணி பி.இ. 12-27 வரை. சித்தம். நற்கருமங்கள் செய்யலாம். ராகு 12-27—1-57

மார் 11 வியா (26-12-85) சதுர்த்தசி காலை11-13வ. மிருகசீரிடம் பி.இ. 2-53 வரை, பூரணை விரதம் மரணம். அசுபதினம். ராகு 1-57—3-27

மார் 12 வெள் (27-12-85) பூரணை பகல் 1-01 வ. திருவாதிரை பி.இ. 4-54 வரை. சித்தம், நடேசர் தரிசனம். சுபகருமங்கட்கு நன்றல்ல. ராகு 10-58—12-28

மார் 13 சனி (28-12-85) பிரதமை பகல் 2-24 வ. புனர்பூசம் முழுவதும். சித்தம். கர்ப்போட்டஆரம்பம். நற்கருமங்கட்கு உகந்ததினம். ராகு 9-28—10 58

மார் 14 ஞாயி (29-12-85) துவிதியை பகல் 3-20 வ. புனர்பூசம் காலை 6-32 வரை, சித்தம் நற்கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 4-58—6-28

மார் 15 திங் (30-12-85) திரிதியை பகல் 3-50 வ. பூசம் காலை 7-44 வரை, சித்தம். நாள் நன்றல்ல ராகு 7-59—9-29

மார் 16 செவ் (31-12-85) சதுர்த்தி மாலை 4-00வ. ஆயிலியம் காலை 8-34 வரை, சித்தம், வயல், தோட்டச் செய்கைகள் காலை 8-34இன் மேல் மேற்கொள்ளலாம். ராகு 3-30—5-00

மார் 17 புத (1-1-86) பஞ்சமி பகல் 3-44 வரை. மகம் காலை 9-00 வரை. சித்தாமிர்தம் காலை 9-00 மணிக்குமுன் அவசிய கருமங்களைச் செய்யலாம். ராகு 12-29—1-59

மார் 18 வியா (2-1-86) ஷஷ்டி பகல் 3-04 வரை. பூரம்-சித்தம் காலை 9-02 வரை, காலை 9-02இன் மேல் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 2-00—3-00

மார் 19 வெள் (3-1-86) ஸப்தமி பகல் 1-54 வரை, உத்தரம் காலை 8-43 வரை, சித்தாமிர்தம் பகல் 1-54க்கு முன் அவசியகருமங்களைச் செய்யலாம். ராகு 11-01—12-31

மார் 20 சனி (4-1-86) அஷ்டமி பகல் 12-30 வரை. அத்தம் காலை 7 58 வரை, மரணம். அசுபதினம் ராகு 9-31—11-01

மார் 21 ஞாயி (5-1-86) நவமி பகல் 10-35 வரை, சித்திரை காலை 6-47 வரை, சுவாதி-சித்தம் பி.இ. 5-14 வரை. பகல் 10-35இன் மேல் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 5-01—6-31

மார் 22 திங் (6-1-86) தசமி காலை 8-10 வரை, ஏகாதசி-மரணம் பி.இ. 5-38 வரை. விசாகம் பி.இ. 8-20 வரை ஸ்மார்த்தஏகாதசி, அசுபதினம் ராகு 8-02—9-32

மார் 23 செவ் (7-1-86) துவாதசி பி.இ. 2-45 வ. அனுஷம்-சித்தம் பி.இ. 1-11 வரை, வைஷ்ணவ ஏகாதசிவிரதம். முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 3-22—5-02

மார் 24 புத (8-1-86) திரயோதசி இரவு 11-44 வ. கேட்டை-சித்தம் இரவு 10-54 வரை. பிரதோஷ விரதம். அவசியகருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 12-32—2-02

மார் 25 வியா (9-1-86) சதுர்த்தசி இரவு 8-03 வ. மூலம் இரவு 8-86 வரை, சித்தம், நற்கருமங்கள் செய்யலாம். ராகு 2-03—3-33

மார் 26 வெள் (10-1-86) அமாவாசை மாலை 5-58 வரை, பூராடம்-மரணம் மாலை 6-28 வரை, அமா வாசைவிரதம். அசுபதினம். ராகு 11-03—12-33

மார் 27 சனி (11-1-86) பிரதமை பகல் 3-22 வ. உத்தராடம் மாலை 4-10 வரை, சித்தம், சந்திர தரிசனம். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 9-33—11-03

மார் 28 ஞாயி (12-1-86) துவிதியை பகல் 1-20 வ. திருவோணம்-அமிர்தம் பகல் 3-23 வரை, ராகு 5-04—6-34

மார் 29 திங் (13-1-86) திரிதியை பகல் 11-59 வ. அவிட்டம் பகல் 2-44 வரை, சித்தம், சதுர்த்தி விரதம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 8-04—9-34

## மார்கழி மகிமை

மார்கழிமாத திருவாதிரைக்கு முந்திய ஒன்பது தினங்களும் நடைபெறும் இவ்விழா திருவெம்பாவை நோன்பு என அழைக்கப்படும். தை முதல் ஆனி வரையுள்ள ஆறுமாத காலம் தேவர்களுக்குப் பகல் காலமாகவும் ஆடிமுதல் மார்கழி வரை இராக்காலமாகவும் இக்காலப்பகுதியில் இரவின் முடிவுக்காலமே மார்கழி மாதத்திற்குரியதாகின்றது. இக்காலம் தேவர்களுக்கு விடியற்காலமாகின்றது. இவ்வுதயக்காலத்தில் இறைவனுக்கு பூஜை, வழிபாடு முதலியன செய்வது தேவர்களுக்குகந்ததாகும். திருவெம்பாவைத் தினங்களில் விடியற்காலத்தில் திருப்பள்ளியெழுச்சி பாடி ஆலயங்களில் இறைவனைப் பள்ளியினின்றும் எழுப்புவதாக கதவுகளைத் திறத்தலும், பெண்கள் தோழி வரை நீராடிவரும் வண்ணம் ஆனந்தக் கூத்தாடும் காட்சிகள் நிறைந்த திருவெம்பாவைப் பாடல்களை மணிவாசகர் பாடுவதாக ஆலயங்களின் இறைவன் சந்நிதியில் பாடுவதும் மனத்திற்கும் உடலுக்கும் உற்சாகமளிக்கும் அருட்செயல்களாகும்.

ஆன்மாவானது ஆணவமல இருளில் கிடந்துழலாமல் திருவருளிற் படிந்து பரிபக்குவ நிலையையடைய வேண்டும் என்பதே திருவெம்பாவையின் தத்துவப் பொருளாகும் என்பதை

''தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்ப சிலம்பு கலந்தார்ப்ப
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க
பங்கயப்பூம்புனல் பாய்ந்தாடேலோரெம் பாவாய்''

இவ்வடிகள் மெய்ப்பிக்கின்றன.

மேலும் சாதாரண மக்களாகிய நாம் அதிகாலையில் எழுந்து எமது கருமத்தை செய்வது மனதிற்கும் உடலும் உற்சாகமளிப்பதாகும்.

புத்தியதற்குப் பொருந்து தெளி வளிக்குஞ்
சுத்த நரம்பினற் தூய்மையுறும் - பித்தொழியும்
தாலவழி வாதபித்தந் தந்தநிலை நண்ணுமதி
காலை விளிப்பின் குணத்தைக் காண்''

மார்கழி மாதத்தில் அதிகாலையில் விநாயக வணக்கமாக முதலில் வீடுவாசல் சுத்தம் செய்து சாணத்தினால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் சாத்தி வாசலில் கோலமிட்டு அதில் பிள்ளையாரை வைத்து வழிபடுவதும் மார்கழிப்பிள்ளையார் என வழங்கப்படுவதும் ஐந்தொழில் புரியும் ஸ்ரீ சிதம்பரநடராஜப் பெருமானை இக்காலங்களில் விசேடமாகவழிபாடுசெய்வதும் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேககாலங்களில் உதயகாலத்திற் குரிய அபிஷேகமும் தர்சனமும் விசேடமாக ஆருத்திரா தர்சனத்தை கண் குளிரக்கண்டு ஆனந்திப்பதும் மார்கழிமாதத்திற்குரிய விசேடங்களாகும்.

'மாதங்களில் நான் மார்கழி' எனக்கூறும் கண்ணபிரானின் அவதாரமெடுத்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் வைகுண்ட ஏகாதசிவிரதமும் நித்திய நிலையான முத்தியின்பத்தை விரும்புபவர்களின் மறுமைப்பயன்களின் பலன்களுக்குரிய இம்மார்கழி மாதத்திற்கு மங்காதமகிமையைக்கொடுக்கின்றது.

போற்றியாம் மார்கழி நீராடேலோரெம்பாவாய்


பலாபலனுக்குச் சரிவருவது

**திருக்கணித பஞ்சாங்கம்**

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### குரோதன ஸ்ரீ மார்கழி மீ 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை. (16-12-85 முதல் 13-1-86 வரை)

| இங் | தமி | வாரம் | தனுசு | | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுன | கடகம் | சிங்கம் | கன்னி | துலா | விருச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டிச | மாரி | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல் | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) |
| 16 | 1 | திங் | 6 22 | 8 30 | 10 26 | 12 11 | 1 54 | 3 43 | 5 46 | 7 57 | 10 04 | 12 5 | 2 4 | 4 8 | 6 18 |
| 17 | 2 | செவ் | 6 19 | 8 25 | 10 21 | 12 6 | 1 49 | 3 38 | 5 41 | 7 52 | 9 59 | 12 00 | 1 59 | 4 3 | 6 13 |
| 18 | 3 | புதன் | 6 14 | 8 22 | 10 18 | 12 3 | 1 46 | 3 35 | 5 38 | 7 49 | 9 56 | 11 57 | 1 56 | 4 0 | 6 10 |
| 19 | 4 | வியா | 6 11 | 8 19 | 10 15 | 12 0 | 1 43 | 3 32 | 5 35 | 7 46 | 9 53 | 11 54 | 1 53 | 3 57 | 6 7 |
| 20 | 5 | வெள் | 6 8 | 8 15 | 10 11 | 11 56 | 1 39 | 3 28 | 5 31 | 7 42 | 9 49 | 11 50 | 1 49 | 3 53 | 6 3 |
| 21 | 6 | சனி | 6 4 | 8 11 | 10 7 | 11 52 | 1 35 | 3 24 | 5 27 | 7 38 | 9 45 | 11 46 | 1 45 | 3 49 | 5 59 |
| 22 | 7 | ஞாயி | 6 0 | 8 7 | 10 3 | 11 48 | 1 31 | 3 20 | 5 23 | 7 34 | 9 41 | 11 42 | 1 41 | 3 45 | 5 55 |
| 23 | 8 | திங் | 5 56 | 8 2 | 9 58 | 11 43 | 1 26 | 3 15 | 5 18 | 7 29 | 9 36 | 11 37 | 1 36 | 3 40 | 5 50 |
| 24 | 9 | செவ் | 5 51 | 7 59 | 9 55 | 11 40 | 1 23 | 3 12 | 5 15 | 7 26 | 9 33 | 11 34 | 1 33 | 3 37 | 5 47 |
| 25 | 10 | புதன் | 5 48 | 7 55 | 9 51 | 11 36 | 1 19 | 3 8 | 5 11 | 7 22 | 9 29 | 11 30 | 1 29 | 3 33 | 5 43 |
| 26 | 11 | வியா | 5 44 | 7 51 | 9 47 | 11 32 | 1 15 | 3 4 | 5 7 | 7 18 | 9 25 | 11 26 | 1 25 | 3 29 | 5 39 |
| 27 | 12 | வெள் | 5 40 | 7 48 | 9 44 | 11 29 | 1 12 | 3 1 | 5 4 | 7 15 | 9 22 | 11 23 | 1 22 | 3 26 | 5 36 |
| 28 | 13 | சனி | 5 37 | 7 44 | 9 40 | 11 25 | 1 08 | 2 57 | 5 0 | 7 11 | 9 18 | 11 19 | 1 18 | 3 22 | 5 32 |
| 29 | 14 | ஞாயி | 5 33 | 7 39 | 9 35 | 11 20 | 1 3 | 2 52 | 4 55 | 7 6 | 9 13 | 11 14 | 1 13 | 3 17 | 5 27 |
| 30 | 15 | திங் | 5 28 | 7 36 | 9 32 | 11 17 | 1 0 | 2 49 | 4 52 | 7 3 | 9 10 | 11 11 | 1 10 | 3 14 | 5 24 |
| 31 | 16 | செவ் | 5 25 | 7 31 | 9 27 | 11 12 | 12 55 | 2 44 | 4 47 | 6 58 | 9 5 | 11 6 | 1 5 | 3 9 | 5 19 |
| 1 | 17 | புதன் | 5 20 | 7 27 | 9 23 | 11 8 | 12 51 | 2 40 | 4 43 | 6 54 | 9 1 | 11 2 | 1 1 | 3 5 | 5 15 |
| 2 | 18 | வியா | 5 16 | 7 24 | 9 20 | 11 5 | 12 48 | 2 37 | 4 40 | 6 51 | 8 58 | 10 59 | 12 58 | 3 2 | 5 12 |
| 3 | 19 | வெள் | 5 13 | 7 21 | 9 17 | 11 2 | 12 45 | 2 34 | 4 37 | 6 48 | 8 55 | 10 56 | 12 55 | 2 59 | 5 9 |
| 4 | 20 | சனி | 5 10 | 7 16 | 9 12 | 10 57 | 12 40 | 2 29 | 4 32 | 6 43 | 8 50 | 10 51 | 12 50 | 2 54 | 5 4 |
| ஜன 5 | 21 | ஞாயி | 5 5 | 7 13 | 9 9 | 10 54 | 12 37 | 2 26 | 4 29 | 6 40 | 8 47 | 10 48 | 12 47 | 2 51 | 5 1 |
| 6 | 22 | திங் | 5 2 | 7 8 | 9 4 | 10 49 | 12 32 | 2 21 | 4 24 | 6 35 | 8 42 | 10 43 | 12 42 | 2 46 | 4 56 |
| 7 | 23 | செவ் | 4 57 | 7 4 | 9 0 | 10 45 | 12 28 | 2 17 | 4 20 | 6 31 | 8 38 | 10 39 | 12 38 | 2 42 | 4 52 |
| 8 | 24 | புதன் | 4 53 | 7 0 | 8 56 | 10 41 | 12 24 | 2 13 | 4 16 | 6 27 | 8 34 | 10 35 | 12 34 | 2 38 | 4 48 |
| 9 | 25 | வியா | 4 48 | 6 56 | 8 52 | 10 37 | 12 20 | 2 9 | 4 12 | 6 23 | 8 30 | 10 31 | 12 30 | 2 34 | 4 44 |
| 10 | 26 | வெள் | 4 45 | 6 52 | 8 48 | 10 33 | 12 16 | 2 5 | 4 8 | 6 19 | 8 26 | 10 27 | 12 26 | 2 30 | 4 40 |
| 11 | 27 | சனி | 4 41 | 6 48 | 8 44 | 10 29 | 12 12 | 2 1 | 4 4 | 6 15 | 8 22 | 10 23 | 12 22 | 2 26 | 4 36 |
| 12 | 28 | ஞாயி | 4 37 | 6 44 | 8 40 | 10 25 | 12 08 | 1 57 | 4 0 | 6 11 | 8 18 | 10 19 | 12 18 | 2 22 | 4 32 |
| 13 | 29 | திங் | 4 33 | 6 40 | 8 36 | 10 21 | 12 04 | 1 53 | 3 56 | 6 7 | 8 14 | 10 15 | 12 14 | 2 18 | 4 28 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: மாரி 29உ (13-1-86) பகல் 12-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (12-04—1-53) மேடலக்னம்

# மார்கழி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | ராகு | | |
| கும்பம் | மார்கழி மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம்: குரு | | | சிங்கம் |
| சூ நெப் | புத, சுக் யூரே, சனி | குஜ கேது | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

7உ (22-12-85) பகல்1-50க்கு தனு-சுக்
17உ (1-1-86) மாலை6-17க்கு தனு-புத
27உ புதன் அஸ்தமனம்.
2உ சுக்கிரன் அஸ்தமனம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மார் | 1உ | (16-12-85) | பகல் | 4-52 | முதல் | கும்பம் |
| | 3உ | (18-12-85) | பி. இ. | 12-46 | ,, | மீனம் |
| | 6உ | (21-12-85) | பகல் | 12-19 | ,, | மேடம் |
| | 8உ | (23-12-85) | பி. இ. | 1-23 | ,, | இடபம் |
| | 11உ | (26-12-85) | பகல் | 1-42 | ,, | மிதுனம் |
| | 13உ | (28-12-85) | பி. இ. | 12-09 | ,, | கடகம் |
| | 16உ | (31-12-85) | காலை | 8-33 | ,, | சிங்கம் |
| | 18உ | (2-1-86) | பகல் | 3-00 | ,, | கன்னி |
| | 20உ | (4-1-86) | இரவு | 7-22 | ,, | துலாம் |
| | 22உ | (6-1-86) | இரவு | 9-48 | ,, | விருச்சிகம் |
| | 24உ | (8-1-86) | இரவு | 10-54 | ,, | தனுசு |
| | 26உ | (10-1-86) | இரவு | 12-00 | ,, | மகரம் |
| | 28உ | (12-1-86) | பி.இ. | 3-00 | ,, | கும்பம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மார்கழி மீ 29 உ பகல் 12-30மணிக்கு மேட லக்னம் என அறிந்து கொண்ட பின் மேடம் என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் பிறக்கும்போது கடகம் உதயலக்கினமாக அமைகிறது. 7-ம் வீட்டில் குரு - சந்திரன் இருப்பது ஓரளவு நன்மையைக் கொடுக்கும். சில கஷ்டங்கள் இருப்பினும், அதிகமான பாதிப்புகள் இல்லை. விவசாயம் முதலியன சிறக்கும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது:

## (மார்கழி மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 22 நிமிஷம்)

| வாரம் | 6...22 7...22 | 7...22 8...22 | 8...22 9...22 | 9...22 10...22 | 10...22 11...22 | 11...22 12...22 | 12...22 1...22 | 1...22 2...22 | 2...22 3...22 | 3...22 4...22 | 4...22 5...22 | 5...22 6...22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற் கழகம் — வெளியீடு இல.64
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மார்கழி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

16-12-85 — 13-1-86

சூரியன்:- 15-12-85 இரவு மணி 10-02ல் தனுராசிப்பிரவேசம்
16-12-85 உதயம் காலை 6-22 அஸ்தமனம் மாலை 5-49
13-1-86 உதயம் காலை 6-34 அஸ்தமனம் மாலை 6-02

சந்திரன்:- 19-12-85 பூர்வாஷ்டமி இரவு 8-18
29-12-85 பூரணை பகல் 1-01
4-1-86 அபராஷ்டமி பகல் 12-30
10-1-86 அமாவாசை மாலை 5-53
11-1-86 சந்திரதர்சனம்.

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் சூரிய உதயம்முன் கீழ்வானில் 21பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் அடுத்த நாள் இன்னும் சிறிது உயர்ந்து சூரியனிலிருந்து கூடியதூரம் பிரிந்து காணப்படும். பின் அதன் உயரம் படிப்படியே குறைந்து 11-1-86ல் கிழக்கில் அஸ்தமனமடைந்துவிடும். 1-1-86ல் தனுராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் உதயம்முன் கீழ்வானில் 9பாகை உயரத்தில் ஒளியிழந்து காணப்படுமிக்கிரகம் அடுத்த நாளாகிய 17-12-85ல் கிழக்கில் சூரிய சாமீப்பியத்தினால் அஸ்தமனமாகிவிடும். பின் இம்மாசம் முழுவதும் இதனைக்காண முடியாது. 22-12-85ல் தனுராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாசத்தொடக்கத்தில் சூரிய உதயம் முன் கீழ்வானில் 53பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் 64பாகை உயரத்தில் தோற்றும். இம்மாசம் முழுவதும் துலாராசியிலேயே சஞ்சரிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனமானபின் மேற்குவானில் 52பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 28பாகை உயரத்திற் காணப்படும். மகரராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 25-12-85ல் அவிட்டம் 1ம் பாதத்திலும், 10-1-86ல் அவிட்டம் 2ம்பாதத்திலும் பிரவேசிக்கிறது.

சனி: மாசத் தொடக்கத்தில் சூரிய உதயம் முன் கீழ்வானில் 20பாகை உயரத்திற்காணப்படுமிக்கிரகம் மாதமுடிவில் 46பாகை உயரத்தில் காணப்படும். விருச்சிகராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 18-12-85ல் அனுஷம் 3ம் பாதத்திற் பிரவேசிக்கின்றது.

இந்திரன் (Uranus): விருச்சிகராசியில் கேட்டை 3ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune): தனுராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 18-12-85ல் மூலம் 4ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

குபேரன் (Pluto): துலாராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 5-1-86ல் சுவாதி 3ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

## சமாகமாதிகள்

16-12-85 நள்ளிரவு சனிக்கு வடக்கு புதன் 2பாகை. விடியற்காலை உதயம் முன் கீழ்வானில் அவதானிக்கவும்.

21-12-85 பிற்பகல் கேட்டை நக்ஷத்திரத்துக்கு வடக்கில் புதன் 6பாகை. உதயம் முன் அவதானிக்கவும்.

21-12-85 உத்தராயணம். (Winter Solstice)

6-1-86 காலையில் சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 1பாகை. அன்று உதயம்முன் அவதானிக்கவும்.

7-1-86 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு சனி 4பாகை. மறுநாள் உதயம்முன் அவதானிக்கவும்.

12-1-86 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு வியாழன் 4பாகை.

# இனப்பிரச்சினையும் நிலையான அமைதியும்

'சாரசோதிடர்' ஈ. கே. குலசிங்கம் 109, ஹம்டன் லேன், வெள்ளவத்தை.

இலங்கையின் இனப்பிரச்சினை தீராத ஒரு தொடர்கதையாகவே இருக்கிறது; விரைவில் தீரும் என்ற நம்பிக்கை குறைந்துகொண்டே செல்கிறது. கிரகசஞ்சாரங்களும் பிரச்சினைகள் தீருவதற்கு உதவியாக இல்லை.

இலங்கையின் இலக்கினமான கும்பத்திற்கு 10-ம் இராசியில் உள்ள சனி, யுரேனஸ் ஆகியனவும் இராகு, கேதுவின் நிலையும் நல்லதாகவில்லை.

1986 நவம்பர் 18-ம் திகதிவரை சனி ஸ்திர ராசியில் தனது அனுஷ நட்சத்திர சஞ்சாரத்தில் சஞ்சரிக்கிறது; 10-ம் இடம் இலங்கைக்கு ஆட்சித் தானமாக இருப்பதால் அதிகாரங்களை பரவலாக்கல், கையளித்தலில் அதிகமாக மாற்றங்களைச் செய்யவிடாது. அரசு அதிகாரங்களில் பெரும்பகுதியை தன்னகத்தே வைத்துக்கொள்ளவே விரும்பும். அதிகாரப் பரவலாக்கல் விஷயத்தில் அரசு இறுக்கமாகவே நிற்க முயலும் என்பதை கிரகங்கள் காட்டுகிறது. இணக்கம் காணுவது கஷ்டமாக இருக்கும். சனி, யுரேனஸ் ஆகிய இருகிரகங்களும் சூரியன், செவ்வாயால் பாதிப்புறும் போது பலவித சிரமங்கள் நாட்டிற்கு ஏற்பட இடமுண்டு. அக்காலங்களில் நாட்டின் கௌரவத்திற்கும் சோதனையாக இருக்கும்.

சிறுபான்மை இனத்தின் மேஷலக்கினத்திற்கு 8-ம் இராசியில் இருக்கும் சனி ஸ்திர ராசியில் தனது நட்சத்திர சாரத்திலிருக்கின்றது. 8-ம் இடம் சொத்து, உரிமை ஆபத்துக்களைக் காட்டுவதால் சிறுபான்மை இனமும் தமது உரிமைகளை விட்டுக்கொடாது இறுக்கமாகவே நிற்கமுயலும். 1986 ஒகஸ்ட் வரை கேது 7ல் இருப்பது பங்காளிகளுடன் இழுபறிநிலையைத் தோற்றுவிக்கும். இணக்கம் காணுவது கஷ்டமாக இருக்கும்.

1986 ஜனவரியில் வியாழமாற்றத்தின் பின் அரசுக்கு (2-வது 11-ம் அதிபதியாவதால்) பண வருவாய்களும், மற்றும் உதவிகளும் கிடைக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு.


சிறுபான்மையினருக்கு சனி, யுரேனஸ் 8-ம் இடத்தில் நிற்பது சொத்து அழிவும், ஆபத்துக்களையும் காட்டுகிறது. இக்கிரகங்கள் சூரியன் செவ்வாயால் தாக்கமடையும்போது கஷ்டங்கள் அதிகரிக்கும். சனி, யுரேனஸ் சிறுபான்மை இனத்தவர்கட்கு உரிமை கிடைப்பதில் நம்பிக்கையின்மை, சோர்வு ஏற்படக்கூடியதாக இருப்பினும் வியாழன் 9, 12-ம் அதிபதியாகி 11ல் நிற்பது வெளியிடங்கள் அல்லது வெளிநாடுகளிலிருந்து உதவிகள் வரலாம் என்றும் காட்டுகின்றது.

1986-ல் சனி, யுரேனஸ்சிற்கு, செவ்வாய் சூரியன், வியாழன் ஆகியன ஒன்றுக்கு ஒன்று தீயதிருஷ்டி ஏற்படும்போது நாட்டில் பொதுவா பல கஷ்டங்களைக் கொடுக்கும்; முக்கியமாக ஆட்சியில் உயர்நிலையில் உள்ளவர்களின் பதவி அல்லது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படலாமென்பதைக் கிரகங்கள் எச்சரிக்கை செய்கின்றன; சூரியனால் ஏற்படும் தாக்கம் குறிப்பிடக்கூடியதாகும்.

1986-ம் ஆண்டில் மாசி, வைகாசி, ஆவணி மாத கிரகசஞ்சாரங்கள் தீயபலன்களைக் கொடுக்கலாம்.

அடுத்து சனி 1987 டிசம்பர் 16 வரை விருச்சிக ராசியில் புதன் சாரத்தில் சஞ்சரிக்கும். புதன் கும்பத்திற்கு 8-ம் அதிபதியாவதும் மேஷத்திற்கு 6-ம் அதிபதியாவதும் திருப்தியான நிம்மதியான சூழ்நிலைகளைத் தராது.

பொதுவாக சனி விருச்சிக இராசியில் இருந்து மாற்றம் அடைந்தபின் ஓரளவு முன்னேற்றம் காணலாம். அதுவும் தனுசு இராசியில் 4-ம், 9-ம் அதிபதி வெள்ளியின் சாரத்தில் சஞ்சரிக்கும் காலம் நிரந்தர தீர்வு அல்லது நிம்மதி உறுதிப்படும் என்று கருதக்கூடியதாக உள்ளது.




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 16-12-85 முதல் 13-1-86 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



### மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் ஒன்பதில் தாம்ர மூர்த்தியாகி வலம் வருகின்றார். மற்றும் பிரதான கிரகங்களான செவ்வாய், குரு, சனீஸ்வரன் ஆகியோரின் துர்க்கோசார சஞ்சாரமும் இவர்களுக்கு நிகழுகின்றது. தசா - புத்தி, அந்தர பெலமுள்ளவர்கள் தவிர மற்றவர்களுக்குப் பெரும்பாலும் சோதனை காலமாக அமையும். அடிக்கடி தேக நலம் பாதிப்புறும். விபத்துக்கள், குடும்பசுகவீனம் முதலான துன்பங்கள் தொடரும். இராசாங்க விரோதம் பந்துமித்திரர் சேதம். பொருள் நட்டம், பிறதேசசஞ்சாரம் பான்றே கஷ்டங்களையே இவர்கள் எதிர்நோக்கவேண்டி இருக்கும்.

குடும்பத்தில் பிணி, பீடைகள் சச்சரவுகள் தொடரும். குடும்பவருமானம் பெருமளவில் குறைவுறும். பந்து சனதுன்பம், பகைவிரோதச் சம்பவங்கள் கவலைதரும். வீட்டில் துக்கசம்பவங்கள் பொருள் நட்டம் முதலானவையும் இடம்பெறக் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். வாடிக்கையாளரின் வருகை குறைவுறும். முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. நிதி நெருக்கடி கவலை தரும். சோர சத்துரு பயமும் இடைக்கிடை ஏற்படக்கூடும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைநீக்கம் அல்லது பதவி இறக்கம், விரும்பத்தகாத இடமாற்றங்களும் சிலருக்கு இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்குப் பயிரழிவும் உற்பத்திச் செலவும் கவலைதரும். கூலியாட்களின் கெடுபிடிகள் அதிகரிக்கும். கடன் பளு அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் குறைவுறும்.

தொழிலாளருக்கு வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கும். நாட்கூலி வேலையாட்களுக்கு அன்றாடச் செலவுக்கே திண்டாட்டம் ஏற்படும். தொழிலாளர் முதலாளிகள் கருத்து வேற்றுமையும் வலுவடையும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். மாணவர் கல்வியூக்கம் பெரிதும் குறையும். கல்வித் தேர்ச்சியும் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் பெறாது.

பெண்களுக்குப் பலவித சோதனையான சம்பவங்கள் தொடரும். கன்னிப்பெண்கள் கயவர்களின் வஞ்சனைக்குள்ளாகினாலும் ஆச்சரியமில்லை. விவாக முயற்சிகளிலும் தடை தாமதங்களே ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் குடும்பத்தில் அமைதிகுன்றும்.

அதிஷ்டநாட்கள்: டிச. 17,18,22,23,27,28, ஜன. 1,2பகல் 9,10,13.
துரதிஷ்டநாட்கள்: டிச. 19,20,21 மு.ப. ஜன. 2இரவு 3,4, பகல் 7,8.




கார்த்திகை 2,3 4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபகவான் அட்டமத்தில் ராஜஸ மூர்த்தியாகிப் பலக் குறைவுடனேயே சஞ்சாரம் செய்வது சுபபலன்களை அதிகம் குறைவடையச் செய்யும். மேலும் சனியும் யுரேனசும் சேர்ந்து 7ல் சஞ்சாரம் செய்வதும் குடும்பத் தொல்லைகளையே அதிகரிக்கச் செய்யும். எப்படியாயினும் குருபகவானின் கோசார பலமும் திருஷ்டி பலமும் இவர்களுக்கு இருப்பது ஆறுதல் கொடுக்கும். வருமானத்திற்குச் செலவுகளும் ஏற்படும். பெரியவர்கள் உதவி ஒத்தாசைகள் அவ்வப்போது கிடைக்கும். சிலருக்கு கருவி விஷ அக்கினி பயமும் இராசாங்க கெடுபிடிகளும் ஏற்படக்கூடும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பவருமானம் வீழ்ச்சியுறும். குடும்ப சுகவீனம் அடிக்கடி தொல்லை தரும். குடும்பத்தில் பிணக்குகள் கருத்து வேறுபாடுகள் வலுவடையும். புத்திரர் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சமநிலையில் இருக்கும். வங்கி நிதிவசதிகள் உதவிகள் கிடைத்தாலும் அநாவசியச் செலவுகளும் ஏற்படவே செய்யும். பங்கு முதலீடுகள் எதிர்பார்த்த லாபம் தரமாட்டாது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உத்தரவுகளை செயல்ப்படுத்த முடியாத தருமசங்கடநிலையே தொடரும். சிலருக்குப் பதவி இறக்கம் அல்லது பதவி நீக்கம், கஷ்டப்பிரதேச இடமாற்றம் முதலான சிக்கல்களும் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு ஓரளவு பயிர் உற்பத்தி முன்னேற்றம் காணும், ஆனால் இயற்கைப் பாதிப்புக்களால் பயிரழிவு ஏற்படவே செய்யும். பண்ணை விவசாயிகளுக்குக் கூலியாட்கள் பிரச்சினைகள் ஏற்படும்.

தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் பெருமளவில் குறைவுறும். தொழில் பிணக்குகள் அதிகரிக்கும். தினக்கூலியாட்களின் சீவனம் பெரிதும் கஷ்டம் தரும். தொழில் ஒப்பந்த வேலைகளைச் செய்து முடிக்க இயலாமையால் நட்டம் ஏற்படும்.

மாணவர்கள் கல்வி ஊக்கம் திருப்தி தரும். ஆனால் கல்வி அதிகாரிகள் கல்விக்கூடங்களின் கதவடைப்புக்கள் முதலியவற்றால் கல்வி முன்னேற்றம் பெரிதும் தடைப்பட ஏதுவாகும். சுயமுயற்சியுடையவர்களின் கல்வித்தேர்ச்சி திருப்தி அளிக்கும்.

பெண்களுக்குச் கிரமங்களுக்கு மத்தியில் விவாகாதி முயற்சிகள் நிறைவுறும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். ஆனால் துர்ச்சனர் சேர்க்கையால் அல்லல்களும் அவமான சம்பவங்களும் ஏற்படவும் கூடும்.

அதிஷ்டநாட்கள்: டிச. 19,20,24,25,29,30 ஜன. 2இரவு 3,4பகல் 11,12,
துரதிஷ்டநாட்கள்: டிச. 21பி.ப. 22,23 ஜன. 4இரவு, 5,6பகல் 9,10.




மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுன இராசியில் செனனமானவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் லோகமூர்த்தியா

கிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது துர திஷ்டமே. மேலும் குருபகவான் அட்டமத்தில் சஞ்சரிப்பதும் தீயபலன்களையே அதிகரிக்கச் செய் யும். பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்ப சுகம் முதலானவை அடிக்கடி பாதிக்கப்படும். எதி லும் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் விபத்துக் கள் முதலான துர்ச்சம்பவங்களைப் பெரும்பாலும் எதிர்கொள்ளவேண்டி ஏற்படும். சனிபகவானின் சுபகோசரசஞ்சாரம் செய்தலின் எவ்வகைக்கஷ்ட நட்டங்களையும் சமாளித்து விடுவார்கள்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப உறவுகள் பாதிக்கப்படும். குடும்ப சுகவீனம். இனசன பந் துக்கள் விரோதம், பொருள்நட்டம் முதலியன தொடரும். புத்திரர் உதவிகளுக்குப் பதிலாக புத்திரசோக சம்பவங்களும் தொல்லை தரும்.

வர்த்தகர்களுக்கு வியாபார நெருக்கடிகள் அதிகரிக்கும். அவசர புத்தியும் முன்கோபமும் வாடிக்கையாளரின் வருகையைக் குறைக்கும். கறுப்புச்சந்தை வியாபாரிகள் பெருநட்டத்தையும் தண்டனைகளையும் எதிர்கொள்ளுவார்கள்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் தண் டிக்கப்படவேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற் பட்டுக் கொண்டே இருக்கும். சகஊழியர்களின் வெறுப்புக்குள்ளாகவேண்டி இருக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்தி மகிழ்ச்சிதரும். விவசாயப் பண்ணைகளில் விளைவுகள் அதிகரிக்கும். ஆனால் உற்பத்திப் பொருட்களை உரிகாலத்தில் சந்தைப்படுத்த முடியாமையால் வருமானம் பெரு மளவில் குறைவுறும்.


தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக் கும். ஆனால் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடை யாது. தொழில் பிணக்குகள் சுமுகமாகத்தீரும். ஒப்பந்தத் தொழில்களால் எதிர்பார்த்த லாபம் கிடையாது.

மாணவர் கல்விக்குழப்பநிலை வளரும்; ஆசிரி யர்கள் மாணவர் கல்வி அதிகாரிகள் மத்தியில் கருத்து மோதல்கள் சிக்கல்களை உண்டாக்கும். மாணவர் மத்தியில் மறதியும், அலட்சியப் போக் கும் ஏற்படுதலால் கல்வித் தேர்ச்சியும் குன்றும்;

பெண்களுக்கு சுயகௌரவத்துக்குப் பாதக மான காலம் எனக் கோள்கள் எச்சரிக்கின்றனர்; விவாக முயற்சிகள் பெரும்பாலும் தடைதாமதங் கள் தோல்விகளில் முடியும். குடும்பப் பிணக்கு கள் அமைதியை குலைக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிச. 17,18,21பி.ப. 22,23,
ஜன. 1,2பகல் 5,6பகல் 18

துரதிஷ்டநாட்கள்: டிச. 24,25,26பகல்
ஜன. 6இரவு 7,8,11,12



## கடகம்

**புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

கடகராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபக வான் இந்தமாதம் 6ல் தாம்ரமூர்த்தியாகி மூர்த்தி பலம் குறைந்து தானபலம் பெற்றுச் சமபலத்து டன் சஞ்சாரம் செய்வது நன்மை கலந்த தீய பலன்களை எதிர்பார்க்கலாம். குருபகவானின் சுப கோசார சஞ்சாரமும் திருஷ்டியும் இவர்களுக்கு இருப்பது நன்மையாகும். தேகசுகம் குடும்பசுகம் திருப்தியாயிருக்கும். பொருள் வருமானத்திற்கு எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பகை விரோ தச் சம்பவங்கள் இடம் பெற்றாலும் முடிவுகள் பெரும்பாலும் இவர்களுக்குச் சாதகமாகவே அமையும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப நல்லுறவு விருத் தியடையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் உதவிகள் கிடைத்தாலும், புத்திரர் கவ லையும் சிலருக்கு ஏற்படலாம். வீட்டில் விவாகாதி சுபசந்தோஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடை யும். முதலீடுகளில் நயம் குறைவடையும். வங்கி நிதிவசதிகள் திருப்தியாய் இருந்தாலும் புது முத லீடுகள் செய்வதைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். சிலருக்கு பதவியு யர்ச்சி கூடக் கிடைக்கும். சக ஊழியர்களுக்கிடை யில் கருத்துமோதல்களும் அவ்வப்போது ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்தியில் கஷ்ட நட்டங்கள் அடிக்கடி ஏற்படும். மானிய உதவி பசளை முதலியன உரியநேரத்தில் கிடையாது. பண்ணைவிவசாயிகளுக்குக் கூலியாட்களின் பிரச் சினைகளும் ஏற்படும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறை வுறும். அரசாங்க கூட்டுத்தாபனத் தொழிலாளர் களுக்கு தொழில் வசதிகள் அதிகரிக்கும். ஒப்பந்

தத் தொழில் வேலைகளால் லாபத்துக்குப் பதில் நட்டம் ஏற்படும். நாட்சம்பள வேலையாட்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.

மாணவர் கல்வியூக்கம் அதிகரிக்கும். ஆசிரியர் ஒத்துழைப்பும் ஆதரவும் இவர்களுக்குக் கிடைக்கும். ஆனல் கல்வி நிலையங்களில் கதவடைப்புக ளும் அவ்வப்போது இடம்பெறும். கல்வித்தேர்ச்சி திருப்தியளிக்கும்.

பெண்களுக்கு முன் தடைப்பட்டுக் கொண்டிருந்த விவாகமுயற்சிகள் நிறைவுபெற ஏற்ற காலம். குடும்பப் பெண்களுக்கு மனம் நிறைவு குடும்பத்தில் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண் களுக்கும் சுமாராக மனநிறைவுகள் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிச. 19,20,24,25,26,ப.29. ஜன.2இரவு 3,4,பகல் 7,8

துரதிஷ்டநாட்கள்: டிச. 16இரவு 17,18, 27,28 ஜன.9,10,13




மகம், பூரம், உத்தரம் 1—ம்கால்

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 5ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்தி பலம் பெற்றுப் பவனிவருகின்ருர். கடந்த காலங்களில் உங்களுக்கு நிகழ்ந்த கஷ்டநஷ்ட பலன்களிலிருந்து சிறிது விடுதலை இவர்களுக்குக்கிடைக்கும். தேககசுகம் திருப்திதரும். பொருள் வருமானம் அதிகரிக்கும். இராசாங்க அதிகாரிகள் உதவிகள் கிடைக்கும். ஆனல் குருபகவான் சனீஸ்வரன் இவர்களின் துர்க்கோசார சஞ்சாரமும் சேருவதால் எதுவும் 'கைக்கெட்டியது வாய்க்கெட்டாதபடி' ஏமாற்றமடைய நேரிட்டாலும் ஆச்சரியமில்லை.

குடும்பத்தவர்கட்கு குடும்ப நல்லுறவு பாதிக்கப்படும். குடும்பவருமானம் குன்றும். எதிர்பாராத திடீர்ச் செலவினங்கள் குடும்பத்தில் செலவினங்களை ஏற்படுத்தினுலும் ஆச்சரியமில்லை. புத்திர உதவிகள் கிடையாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் பலவகையிலும் முட்டுக்கட்டைகள் ஏற்படும். முதலீடுகள் நட்டத்தையே கொடுக்கும், வாடிக்கையாளரின் வருகை குன்றும். வங்கிநிலை பாதிப்படையும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணங்கள் அதிகரிக்கும். சிலருக்குப் பதவியுயர்ச்சிகள் கூடக் கிடைக்கும். ஆனல் சகஊழியர்களின் வெறுப்பும் ஒத்துழைப்பின்மையும் சிரமங்களைக் கொடுக்கும்.

விவசாயிகளுக்கு பயிருற்பத்தி பூச்சி புழுக்கள் வெள்ளம் முதலான இயற்கை ஏதுக்களால் பாதிப்புறும். அரசமானியம் முதலான உதவிகள் சமயத்துக்குக் கிடையாது.

தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும். முதலாளிமார் தொழிலாளர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் வேலைநிறுத்தம் முதலானவற்றுல் வேலையில்லாப்பிரச்சினை வலுவடையும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். கல்வி அதிகாரிகள் - ஆசிரியர்கள் - மாணவர்களின் கருத்துவேறுபாடுகள் வலுவடையும். மாணவர் மத்தியில் வெறுப்பு, மறதி, செய்வதறியாதநிலை அதிகரிப்பதால் கல்வித் தேர்ச்சி திருப்திதராது.

பெண்களுக்கு சிக்கல்கள் நிறைந்தகாலம். கன்னிப்பெண்களின் காதல் விவாக முயற்சிகள் சிரமங்களையே கொடுக்கும். குடும்பப் பெண்களுக்கெதிர்பாராத திடீர் கெடுபிடிகள் குடும்பத்தில் ஏற்பட்டு மனத்துன்பத்தைக் கொடுக்கும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 22,23 27,28,31. ஜன 1,2,5,6,9,10.

துரதிஷ்ட நாட்கள்: டிச 16,19,20,29,30. ஜன 11,12.




உத்தரம் 2,3 4, அத்தம், சித்திரை 1,2-ம் கால்

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு இம்மாதம் சூரியபகவான் 4ல் ரஜத மூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்வது சமசுபபலன்களையே தரும். சனீஸ்வரனும் குருபகவானும் இந்தமாதம் சுபகோசார சஞ்சார வலிமை பெறுவதால் நன்மையே தொடரும். செவ்வாயும் கேதுவும் 2ல் இருப்பதும் ராகு 8ல் இருப்பதும் தீமையாகும்.

பொதுவாக இவர்களுக்குப் பொருள்வருமானம் திருப்தியளிக்கும். பெரியோர் சிறியோர் உதவிகள் வீட்டில் சுபசந்தோஷ நிகழ்ச்சிகள் காரிய சித்தி முதலான சுபபலன்களும் வாக்குவிரோதம் குடும்பத்தில் தொல்லைகள் முதலான கஷ்டபலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்கட்கு குடும்பவருமானம் சீராக இருப்பினும் குடும்பத்தில் சிக்கல்களும் பிணக்குகளும் அடிக்கடி ஏற்படும். புத்திரர் உதவிகள் கிடைக்கும். ஆனால் பந்துசன விரோதமும் பகையும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். புது முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். வங்கி நிதி வசதிகளும் திருப்தியளிக்கும். ஏற்றுமதி இறக்குமதி அலங்கார ஆடம்பரப் பொருள் வியாபாரிகட்கு அதிகலாபம்கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் தலையீடுகள் அடிக்கடி ஏற்படுதலால் கடமைகளைச் செய்வதில் சிக்கல்கள் ஏற்படும். உடன் ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் விளைவு மன நிறைவு தரும். விவசாயப்பண்ணை உற்பத்தியும் அதிகரிக்கும். சந்தை வாய்ப்பும் கிடைக்கும். ஆனால் எதிர்பாராத திடீர்த் தாக்கங்களாகிய சோரசத்துரு பயமும் சிலருக்கு ஏற்படவும் கூடும்.

தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் அதிகரிக்கும். வேலைவாய்ப்புக்களும் போதிய வருமானமும் கிடைக்கும். தொழில் ஒப்பந்தங்களால் லாபம் கிடைக்கும்.

மாணவர்களுக்கு கல்வியூக்கம் ஆக்கம்தரும். ஆசிரியர் - மாணவர் மத்தியில் ஒத்துழைப்பும் நல்லுறவும் வளரும். கல்வித் தேர்ச்சியும் திருப்தியளிக்கும்.

பெண்களுக்கு எண்ணங்கள் நிறைவுபெறச் சாதகமான காலம். சிலருக்கு விவாகமுயற்சிகள் வெற்றியளிக்கும். எனினும் முன்கோபமும் அவசர தீர்மானமும் தவிர்க்கப்படாவிட்டால் எண்ணங்கள் பிரதிகூலமுமாகிவிடும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 16,24,25,29,30.
ஜன 3,4,7,8,11,12.
துரதிஷ்ட நாட்கள்: டிச 17,18,22,23,31;
ஜன 1,2,13.



# துலாம்

**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 3ல் லோகமூர்த்தியாகி மூர்த்திபலம் குறைந்தாலும் சஞ்சாரபலம் பெறுவது நன்மையாகும். கடந்தகாலங்களில் நிகழ்ந்த கஷ்டநஷ்டங்களிலிருந்து படிப்படியாக ஓரளவு ஆறுதல் கிடைக்கும், தேகசுகம் விருத்தியடையும். வருமானம் கூடும். பகை விரோதங்கள் குறையும். காரியத்தடைதாமதங்கள் குறைவடையும், ஆனால் சென்மத்தில் செவ்வாயும் கேதுவும் ஏழரைச்சனீஸ்வரனும் 7ல் இராகுவும் 4ல் குருவுமாகக் கோசாரசஞ்சாரம் பலமிழப்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டியதே. எப்படியாயினும் தசாபுத்தி அந்தரபலம் குறைந்தவர்களுக்கு கஷ்டநட்டங்கள் தொடரவே செய்யும்.

குடும்பத்தவர்களுக்கு வருமானம் திருப்தி தரும். ஆனால் குடும்பச் செலவினங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் பிணி பீடைகள் அடிக்கடி துன்புறுத்தும். குடும்ப உறவுகள் விரிசல் காணும்,

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. வங்கிகள் நிதிவசதிகள் குறைவுகாணும். கறுப்புச் சந்தை வியாபாரம் கஷ்ட நஷ்டங்களைத் தரும்.

உத்தியோகத்தர்கட்கு எவ்வகையிலும் கஷ்டநட்டங்களே தொடரும். ஒருபுறம் அதிகாரிகளின் கெடுபிடிகள் மறுபுறம் சக ஊழியர்களின் ஒத்துழைப்பின்மை பொதுமக்களின் விரோத நடவடிக்கைகள் எல்லாம் சேருவதால் செய்வதறியாது செயலிழக்கவும்கூடும்.

விவசாயிகள் பயிர்ச்சேதத்தால் நட்டமடைவார்கள். மானிய உதவிகள் பசளை வசதிகள் குறைவுறும். கூலியாட்கள் பிரச்சினைகள் வளரும். விவசாயப் பண்ணைகள் வருமானம் குன்றும். உற்பத்திக் குறைவும் நட்டமும் ஏற்படும்.

தொழிலாளர்களுக்குள் அமைதிக் குறைவுகள் பிரச்சினைகளைக் கொடுக்கும், தொழில் ஒப்பந்தங்கள் நட்டந்தரும். நாட்கூலி வேலையாட்களுக்கு சீவியக் கஷ்டம் அதிகரிக்கும்.

மாணவர் கல்வி ஊக்கமும் ஓரளவு கூடும். ஆனால் கல்வியதிகாரிகள் கல்விநிலையங்களில் குழப்பங்கள் தொடரவே செய்யும். கல்வித்தேர்ச்சி திருப்தியளிக்காது.

பெண்களுக்கு எதிலும் ஏமாற்ற சம்பவங்களே அதிகரிக்கும். விவாக முயற்சிகள் முடிவு பெறாமல் நீளும். குடும்பப் பெண்களுக்குக் குடும்பப் பிணக்குகள் சுகவீனங்கள் துன்பம்தரும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 17,18,27,28; ஜன 1,2,5,9,10,13.

துரதிஷ்ட நாட்கள்: டிச 19,20,24,25,26. ஜன 2இரவு, 3,4.




விசாகம் 4, அனுஷம், கேட்டை

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 2ல் தாம்பர மூர்த்தியாகி பகைக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. உடல் உளப்பாதிப்புக்கள் அடிக்கடி ஏற்படும். வருமானம் குறைவுறும். செலவுகள் அதிகரிக்கும். அரசபயம் சோரசத்துருபயம் முதலான துன்பங்கள் தொடரும். எந்த முயற்சியும் 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த' கதைபோல் ஆகும். மேலும் பிரதான கிரகங்களான சனீஸ்வரன் குருபகவான் இவர்களின் குரூரகோசரசஞ்சாரகாலம் நிகழுவதும் கடின கஷ்டங்களையே கொடுக்க ஏதுவாகும். பேரிழப்புக்கள் விபத்துக்கள் அவமிருத்துக்கள் முதலானவையும் ஏற்படும்.

குடும்பங்களில் அமைதிகுன்றும். பிரிவினைகள் கிளர்ச்சிகள் வாக்குவிரோத சம்பவங்கள் அடிக்கடி நிகழும். குடும்பவருமானத்திலும் செலவுகள் பெருகும். குடும்பத்தில் துக்கசம்பவங்கள் இடம் பெறும்.

வர்த்தகர்கள் முதலீடுகளில் நட்டம் காணும். வியாபார மந்தநிலை தொடரும். ஊழியர்கள் கூட சமயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்தும் விடுவார்கள். வாடிக்கையாளரின் வருகைகுறையும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளுடன் வாக்குவிரோதங்கள் அடிக்கடி ஏற்படுவதால் பதவி இழப்பு பதவி நீக்கம் போன்ற சம்பவங்கள் கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் அதிகரிக்கும். பயிர் உற்பத்தி பலவழிகளிலும் பாதிப்படையும். விவசாயப் பண்ணைகளை மூடவேண்டிய நிலை வந்தாலும் ஆச்சரியமில்லை. வாழ்க்கைத் தரம் குன்றும்.


தொழிலாளர் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை விசுவரூபமெடுக்கும். நாட்கூலிவேலை செய்வோருக்கு மேலும் பல பிரச்சினைகள் ஏற்படுதலால் வருமானம் குன்றும். விபத்துக்கள் அவமிருத்துக்கள் கூட ஏற்படும்.

மாணவர் கல்வித்தடைக் காரணிகளே அதிகரிக்கும். மாணவர் மத்தியில் அலட்சியப்போக்கு மறதி முதலான குணங்கள் ஏற்படுதலால் கல்வி முன்னேற்றம் பெரிதும் குன்றும். ஆசிரியர் மாணவர் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும்.

பெண்களுக்குப் பிரச்சினைகள் பல வழிகளிலும் ஏற்படும். காதல் விவாகமுயற்சிகள் தோல்வி அல்லது ஏமாற்றங்களைத் தரும். விவாகமுயற்சிகளில் தடை தாமதங்களும் செலவுகளும் ஏற்படும். குடும்பப்பெண்களுக்கு குடும்ப சச்சரவுகள் அலைச்சலைக் கொடுக்கும்.

அதிஷ்ட நாட்கள்: டிச 16,19,20,29,30. ஜன 3,4,7,8,11,12.

துரதிஷ்ட நாட்கள்: டிச 22,23,26,27,28. ஜன 4இரவு,5,6.




மூலம், பூராடம், உத்தராடம், 1-ம் கால்

தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் சென்மத்தில் இராஜஸ மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது சுபாசுபங்களைக் கொடுக்கும். உடல்உள நலங்கள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும். இராச உதவிகளும் துன்பங்களும் அல்லது தண்டனைகளும் கிடைக்கும். அலைச்சல் மூலம் காரியசித்திகள் ஏற்படும். குருபகவான் வாக்கிலும், செவ்வாய் லாபத்திலும் சுபகோசாரம் செய்வதும் நன்மையாகும். பெரியோர் உதவி

தேவகடாட்சம், காரியசித்தி, சகோதரர் உதவி, பூமிவருமானம் முதலான சுபபலன்களும் கலந்து நிகழும்.

குடும்ப வருமானம் திருப்திதரும். குடும்ப நல்லுறவு விருத்தியடையும். வீட்டில் சுப சந்தோஷ கொண்டாட்டங்கள் நிகழும். புத்திரர் சகோதரர் பெரியோர்களின் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் உண்டாகும். பவுண் பொன் இரத்தின வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். புது முதலீடுகளும் போதிய லாபம் தரும். வங்கிகள் நிதிவசதிகள் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் அவமதிக்கப்படவும் கூடும். ஆனால் சக ஊழியர்கள் ஒத்துழைப்பு உதவிகள் கிடைக்கும். பதவியுயர்ச்சி அல்லது உறுதிப்படுத்தல் போன்றவைகளுக்கு தடைதாமதங்கள் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர்விளைவுகள் அதிகரிக்கும். நன்செய் விவசாயிகளுக்கு விளைவுகள் மகிழ்ச்சி தரும். பண்ணை விவசாயிகளுக்குக் கூலியாட்களின் தொல்லைகள் ஏற்படும். எப்படியாயினும் விற்றல் வாங்கல் மூலம் லாபம் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு வேலையில்லாப் பிரச்சினைகள் ஓரளவு குறைவுறும். தொழிலாளர் ஒற்றுமை குன்றும். தினக்கூலி வேலையாட்களுக்கு வாரத்தில் கணிசமான நாட்கள் வேலை கிடைக்கும். எப்படியாயினும் வாழ்க்கைச்செலவுக்கு வருமானம் பற்றுக்குறைவாகவே இருக்கும்.

மாணவர் கல்வியில் ஊக்கமும் ஆக்கமும் பெறுவர். ஆசிரியர் - மாணவர் நல்லுறவு வளரும். கலைத்துறை மாணவர் சட்டத்துறை மாணவர் கல்விமுன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்கு எண்ணங்கள் தடைதாண்டி நிறைவுபெறும். காதல் முயற்சிகள் கைகூடிவரும். குடும்பப்பெண்களுக்கு கணவன்மாரின் அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமானதும் / துக்ககரமானதுமான நிகழ்ச்சிகள் சிலருக்கு இடம்பெறவும் கூடும்.

| | |
|---|---|
| அதிஷ்டநாட்கள்: | டிச. 17, 18, 22, 23, 31பகல் |
| | ஜன. 1, 2பகல் 5, 9, 10, 18பகல் |
| துரதிஷ்டநாட்கள்: | டிச. 24, 25, 26, பக. 29, 30 |
| | ஜன. 6இரவு 7, 8 |



# மகரம்

**உத்தராடம் 2, 3, 4, திருவோணம் அவிட்டம் 1, 2.**

மகர இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இந்தமாதம் 12ல் கர்ணமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கின்றார். இவர் மூர்த்திபலம் பெற்றுப் பலமடைதலின் தேகநலம், குடும்பநலம் சீராக இருக்கும். இராசாங்க பெரியோர் உதவிகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். ஆனால் செலவும் அதிகரிக்கும். முன் தடைப்பட்டிருந்த காரியங்கள் சித்தியடையும். அந்நியர் உதவி அந்நிய தேசப் பொருள்வரவு முதலானவையும் கிடைக்கும். குருபகவான் சென்மத்தில் இருத்தலின் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் பகை விரோதங்கள் ஏற்படும்.

குடும்பத்தவர்கள் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சிற்சில பிணக்குகள் அவ்வப்போது ஏற்பட்டாலும் குடும்ப நல்லுறவு சீராகவிருக்கும். குடும்பப்பெரியவர்களின்விரோதங்களேற்படலாம்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக முன்னேற்றமடையும். முதலீடுகளில் லாபம் கிடைக்கும். ஆனால் வங்கி நிதி இருப்புகள் குறைவுறும். புதுமுதலீடுகள் செய்வதைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் நம்பிக்கை ஏற்படும். சிலருக்கு பதவியுயர்ச்சி அல்லது பதவி முன்னேற்றம் என்பனவும் கிடைக்கும். எதிர்பாராத செலவினங்களேற்படும்.

விவசாயிகளுக்கு இயற்கையழிவுகள் ஏற்பட்டாலும் பயிர் வளர்ச்சியும் விளைச்சலும் அதிகரிக்கும். பண்ணை விவசாயமும் வருமானம் தரும். விளைவுகளைச் சந்தைப்படுத்துவதில் தரகர் முதலியோரின் சுரண்டுதலும் அதிகரிக்கும்.

தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக்கள் கிட்டும். தொழிற் பிணக்குகளும் அவ்வப்போது ஏற்பட்டாலும் வருமானம் திருப்திதரும். நாட்கூலி வேலையாட்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

மாணவர் கல்வி முயற்சிகள் அதிகரிக்கும். ஆசிரியர் - மாணவர்களின் கருத்துவேறுபாடுகளும் இருக்கவே செய்யும். சுயமுயற்சி உடையவர்கள் பரீட்சைத் தேர்ச்சியும் பெறுவர்.

பெண்களுக்கு எடுத்த கருமங்களிலெல்லாம் தடைதாமதங்களே ஏற்படும். விவாகமுயற்சிகள் தோல்விகளை அல்லது ஏமாற்றத்தை அளித்தாலும் ஆச்சரியமில்லை. குடும்பப் பெண்களுக்கு வருமானம் அதிகரிக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிச. 16பகல் 19,20,24,25, ஜன. 3,4பகல் 7,8,11,12,

துரதிஷ்டநாட்கள்: டிச. 26இரவு 27,28,31 பகல் ஜன.1,2பகல் 9,10




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 11-ல் லோகமூர்த்தியாகி சார பலம் பெற்றாலும் மூர்த்திபலம் இழப்பதால் நன்மையும், தீமையும் கலந்தே நிகழும். தேக சுகம், குடும்பசுகம் முதலியன அடிக்கடி பாதிப்புறும். இராசாங்க உதவிகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். கிழக்குத் திசையில் அனுகூலங்கள் ஏற்படும். ஆனால் 12-ல் குருவும், 10-ல் சனியும், யுரேனசும் துர்க்கோசாரம் செய்வதால் எந்த அலுவல்களும் தடைதாண்டியே நிறைவு பெறும். குடும்பத்தில் அனுவசியச் செலவுகளேற்படலாகும்.

குடும்பத்தில் வருமானம் திருப்தியளிக்கும். குடும்ப நல்லுறவு அபிவிருத்தி காணும். குரு முதலிய பெரியவர்களால் குடும்பத்தில் செலவுகள் ஏற்படும். தீர்த்தயாத்திரைப் பலன்கள்கூட நிகழலாம். புத்திரர் உதவி கிடையாது.

வர்த்தகர்களுக்கு வருமானம் கூடும். மருந்து வகை இயந்திரவகை வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் எதிர்பார்த்த லாபம் தராது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரித்தாலும் வருமானம் அதிகரிக்கும். சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடுகளும் அவ்வப்போது இடம்பெறும். புதுப் புதுப் பொறுப்புக்களையும் ஏற்கவேண்டியும் வரும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் முன்னேற்றம் காணப்படும். பண்ணை விவசாயமும் பலன் அதிகரிக்கும். விளைவுகளைச் சந்தைப்படுத்துவதில் தரகர் முதலியோரால் சிரமங்களும் இழப்புக்களும் ஏற்படவும் செய்யும்.

தொழிலாளர் தொழிற்பிரச்சினைகள் ஓரளவு குறைவுறும். வேலைவாய்ப்புக்கள் அவ்வப்போது கிடைக்கும். ஒப்பந்த வேலைகளுக்கு முட்டுக்கட்டைகள் அதிகம் ஏற்படமாட்டாது.

மாணவர்களுக்கு முன்னிருந்த கல்வித்தடைகள் ஓரளவு நீங்கும். மாணவர் கல்வியில் ஊக்கமும் ஆக்கமும் கூடும். கணித விஞ்ஞானத் துறை மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் கூடக் கிடைக்கும்.

பெண்களுக்குச் சிக்கல்களுக்கு மத்தியிலும் மனநிறைவுகள் ஏற்படும். காதல் - விவாக முயற்சிகளில் தடைதாமதங்களே பெரும்பாலும் நீடிக்கும். குடும்பப் பெண்களுக்கு வருமானம் மகிழ்ச்சி தரும்.

அதிஷ்ட நாட்கள்: டிசம் 17, 18, 22, 23, 27, 28 ஜன 5, 6 பகல் 9, 10, 13

துரதிஷ்ட நாட்கள் டிசம் 16 பகல், 29,30,31காலை ஜன 2 இரவு, 3, 4 பகல் 11,12




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 10-ல் சுவர்ணமூர்த்தியாகிப் பலம் பெறுவது நன்மையாகும். தேகசுகம், குடும்பசுகம் முதலியன சிறப்பாக அமையும். வருமானம் அதிகரிக்கும். அரசாங்க உதவிகள், பெரியோர் உதவிகள் அவ்வப்போது கிடைக்கும். முன்தடைப்பட்டிருந்த காரியங்கள் சித்தியடையும். வீட்டில் சுப சந்தோஷ நிகழ்ச்சிகள், பிரமுகர்கள் சன்மானம், தேவதரிசனம், தருமசிந்தனை முதலான நற்கருமங்கள் நிகழும். குருபகவான் லாபத்தில் சுப கோசாரம் செய்வதும் மேற்கூறிய பலன்களுக்கு சாதகமாக அமையும்.

குடும்பத்தவர்களுக்கு வருமானம் அதிகரித்தாலும் அவ்வப்போது பிணக்குகளும் சச்சரவுகளும் ஏற்படவே செய்யும். பந்து மித்திரர் புத்திரர் உதவிகள் கிடைக்கும். வீட்டில் சுப சந்தோஷ நிகழ்ச்சிகளும் நிகழும்.

(26-ம் பக்கம் பார்க்க)

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## எண் - 9 செவ்வாய்

பூமி காரகன் எனப் போற்றப்படும் செவ்வாய்க்கிரகம் 9ம் எண்ணின் கிரகமாகும். சோதிட சாஸ்திரத்தில் மேடம் விருச்சிக இராசிகளை ஆட்சி வீடாகவும், மகர இராசியை உச்சவீடாகவும் செவ்வாய்க்கிரகம் கொண்டவராக இருக்கிறார். அதிஷ்ட எண் வரிசையில் 3-6–9 எண்களின் தன்மை படிப்படியாக இயக்கம்- வளர்ச்சி- வேகம் அல்லது அழிவு என்பன வரிசையில் எலக்ரோனிக்கின் அமைப்பை அடிக்கடி வெளிவிடவல்ல எண் 9ம் எண் ஆகும். திடீர் உணர்வுக்கு ஆளாக்கி வேகத்தை அதிகரிக்கவும் கோபம் கொள்ளச் செய்து அழிவைத் தரவும் வல்லது. செவ்வாய்க் கிரகத்தை அங்காரகன், சேய், குகன் இரத்தகாரகன், சகோதரகாரகன் எனப் பல நாமங்களினால் அழைப்பர்.

### 9-ம் எண் ஆதிக்கர்கள்:

எந்த மாதத்திலாவது 9, 18, 27ம் திகதிகளிலும் மார்ச் 21 தொடக்கம் ஏப்ரல்(மேஷம்) 20 வரை அல்லது அக்டோபர் 21 தொடக்கம் (விருச்சிகம்) நவம்பர் 20 வரை உள்ள கால இடைவெளியில் பிறந்தவர்களும், கூட்டு ஒற்றை எண் 9 உடையவர்களும் 9ம் எண்ணின் ஆதிக்கர்களாவர்.

### (அ) எண் 9-ன் செவ்வாய்க்கிரகத்தின் குண இயல்புடையவர்கள்:

இவர்கள் கட்டுமஸ்தான உடலமைப்பு உடையவர்கள். அகன்ற மார்பு, நீண்ட அங்கங்கள், இறுகிய உடலமைப்பும் கொண்டவர்கள். உடலில் இரும்புச்சத்து அதிகமாக இருக்கும். பிரயாசை மிகுந்தவர்கள். விடுதலை வேட்கை மிக்கவர்கள். நிர்வாகத்திறமை கொண்டவர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப எந்த விசயங்களையும் சமாளிக்கும் ஆற்றல் உடையவர்கள். நீதி, நியாயத்திற்கு மாறாக எவராவது நடந்தால் காரண காரியங்களைத் தெரிந்து கொண்டு எதிரியின் ஆற்றலை நன்கு அறிந்துகொண்டு எதையாவது சொல்லி உரத்த குரலில் உரிமைக்குரல் எழுப்புவார்கள்: அதற்கும் சரிவரமாட்டாது எனத்தெரிந்தால் பலாத்காரம், ஆயுதப்பிரயோகம் செய்தாவது எதிராளிகளை அடக்கிவிடுவார்கள். இவர்களை சட்ட திட்டங்களோ, சம்பிரதாயங்களோ ஒன்றும் செய்துவிட முடியாது.

உடலுக்கு உள்ளத்திற்கு (தத்துவ விஞ்ஞானத் துறைகளுக்கு) வேண்டிய சக்திகளுக்கு உரிய எண் 9 ஆகும். சக்தி- வேகம்- அழிவு மாறி மாறி ஏற்படும் தன்மையுள்ளது. இவ்வாதிக்கர்கள் வாக்குவாதப்படுவது சண்டைபிடிப்பது இரத்தகாயம் காண்பது, நெருப்பு எரிவதைக் காண்பது சங்கீதத்தை இரசிப்பது என்பனவற்றில் மனத்திருப்தி அடைகிறார்கள். தங்களைப்பற்றி உயர்வாக அடிக்கடி எண்ணிக் கொள்ளுவார்கள். ஆசை, ஆற்றலால் தலைமைப்பதவிகளை அடைந்து கொள்ளுகின்றார்கள். சிலவேளை இரும்பைப்போல் கடினமனம் கொண்டவர்களாக இருந்தாலும், தனது உதவியை நாடி வருபவர்களுக்கும், நலிந்தவர்களுக்கும் மனம் இழகி (நீர் போன்று) பல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவார்கள். தனக்கு அன்பு ஆதரவு காட்டினால் அநேகமாக இவர்கள் எதையும் செய்து விடுவார்கள். வேகமாகச் செயல்படுவார்கள். எப்பிரச்சனைகளுக்கும் விரைவில் முடிவுகாண முற்படுவார்கள். ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால் அதை தீவிரமாக ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்து விடுவார்கள்: முடிவெடுத்து விட்டால் எப்படியாவது எதையாவது தியாகம் செய்தாவது வெற்றி அடைந்துவிடுவர். புரட்சி புரட்சி என்று புதுக்கருத்துக்களைத் தெரிவித்து புகழடைகின்றார்கள். மேற்சொல்லப்பட்ட பலன்கள் ஆதிக்கபலன் கூடியவர்களுக்குப்

பொருந்தும் பலன்களாகும். மேலும் புத்தி- யுத்தி -சக்தி தரும் எண்ணாகும். தெய்வ பக்தியான இடங்களில் எல்லோருக்கும் அறிவுரைகளை வழங்குவார்கள். அறிவு, ஆற்றல் பொருள் போகம் என்பன படிப்படியாக கிடைக்கும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் பாதகமாக இருந்தால் சமாதானம் பேசவார்கள். இல்லாவிடில் மூர்க்கத்தனமாக எதிர்த்து எதிரிகளைப் பின்வாங்கச் செய்வர். மத்திம ஆதிக்கமுடையவர்கள் குடும்பப்பாரம் சகோதரப்பாசம் முன்னேற்றத்தைத் தடுத்தபடி இருக்கும். மத்திம வயதிலிருந்து படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். இவர்களுக்கு சாந்தி சமாதானம் பிடிக்காது உடனே காரியம் முடியவேண்டும். பரபரப்பு வாழ்க்கை ஏற்படும். சண்டை, சச்சரவு சகஜம். வெற்றி தோல்வி மாறி மாறி ஏற்பட்டபடி இருக்கும். 5ம் எண்காரர்களைப் போன்று களைப்படைய மாட்டார்கள். தோல்வி ஏற்பட்டபோதிலும், அமைதியே வெற்றியின் முதற்படியாக வைத்துப் போராடி வெற்றி அடைவார்கள். சாந்தி சமாதானமென்பது இவர்களுக்குப் பிடிக்காது. அது சோம்பேறிகளின் பேச்சு என்பர். போராட்டம், இரத்தக்காயம் காண்பதென்பது சர்வ சாதாரண விசயமாகும். உடலில் தழும்புகள், காயங்கள் அடிக்கடி ஏற்படும். குடியிருக்கும் வீட்டில் அடிக்கடி சகோதரங்களுடனோ அல்லது பெற்றோருடனோ வாக்குவாதப்பட்டபடி இருப்பார்கள். தனது நாட்டின் பொதுச் சேவைக்காக இனத்தின் விடுதலைக்குப் போராடிக் கொண்டிருப்பார்கள், சமூகத்தொண்டு செய்து தமது காலநேரத்தைச் செலவழிப்பர். காணி பூமி கட்டுவர், கடன்பட்டு வேதனை, சோதனைப்படுவர். 36 வயதுக்குப் பின்பு படிப்படியாக அமைதியான வாழ்வு ஏற்படும். ஆதிக்கப்பலன் குறைந்தவர்கள் கோள் சொல்லித்திரிவர். பல குடும்பங்களை அடுத்துக் கெடுப்பார்கள். இவர்கள் போகும் இடமெல்லாம் சண்டைசச்சரவும் வந்துகொண்டிருக்கும். மற்றவர்களை எப்பொழுதும் கேலி சொல்லித் திரிவர். கொலை கொள்ளைக்காரர்களாவும், சமுதாயத்திற்கு தனது இனத்திற்கு ஒரு கேள்விக்குறியானவர்களாகவும், இருக்கின்றார்கள். பிறருடைய அலுவலுக்காக எவ்வித ஊதியமும் இன்றி செயல்புரிவர். நித்திய தரித்திரர்களாக இருக்கின்றார்கள். சாணேறி முழம் சறுக்கி விடும் அப்பாவிகளாக இருக்கின்றார்கள். பிடிவாதக்காரர்கள். இவர்களை எவரும் திருத்தமுடியாது. ஊரை, உலகத்தை ஏமாற்றுவார்கள். இவர்களை எவராவது திருத்த முற்பட்டால் காலப்போக்கில் அவர்களை, இவரின் பாதைக்கு இவர்களால் மாற்றப்பட்டுவிடுவர். 8ம் எண்காரர்களைப் போன்று இவர்கள் திடீரென எவ்வாறு செயல்படுவார்கள் என்று சொல்லமுடியாது. தன்னை எவரும் ஏமாற்ற முற்படுகின்றார்கள் என அறிந்தால் அவர்களின் திட்டத்தை எவ்வாறாகிலும் சதிசெய்து அழித்து விடுவார்கள். தன்னை மதிக்காதவர்களை அவர்கள் பயப்படும்படியான காரியங்களைச் செய்து பயப்பட வைப்பர். போலிக் கௌரவத்திற்காக போராடுவர். 2, 4, 7, 8 எண்காரர்களைப் போன்று பல பிரச்சனைகள் தொடர்ந்து வந்தபடி இருக்கும். உலகாயுத சக்தி நிரம்பப்பெற்று அனுபவப்பட்டு அறிவு முதிர்ந்து ஞானவடிவாக்கும் தன்மை கொண்டது, 9ம் எண்ணாகும். ஏனைய எண்களைவிட தனித்துவம் கொண்ட எண்ணாகும். இவ் ஒன்பதாம் எண் தன்னுடன் கூட்டியோ, பெருக்கியோ வரும் எந்த எண்ணையும் அடக்கி தான் தனித்து நிற்கக்கூடியது. உதாரணமாக 9ம் எண்ணுடன் 5ம் எண்ணைக் கூட்டி அல்லது பெருக்கும் பொழுது

$$9+5 = 14 = 5$$
$$9\times 5 = 45 = 9$$

கூட்டும் பொழுது கூடும் 5ம் எண்ணை விலத்துகின்றது. பெருக்கும் பொழுது இறுதியில் தான் தனித்து நிற்கின்றது. எதையும் சேர்க்கவும் முடியும்- விலத்தவும் முடியும். தான் தனித்து தனது நிலையை எடுத்துக் காட்டும் தன்மை கொண்டது.

இந்த எண்ணில் பிறந்தவர்களை எந்த எண்காரராவது திருத்த அல்லது மாற்ற முற்படின் இறுதியில் 9ம் எண்ணில் பிறந்தவர்களின் கொள்கை சட்டதிட்டங்களை ஏனைய எண்காரர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

## தொழில்:

அரசாங்கத்தில் நிர்வாகப் பகுதியில் பொறுப்பான பதவிகளையோ உயர் பதவிகளையோ வகிக்கிறார்கள். தொழிலிடத்தில் அதிகாரத்தொனியில் மற்றவர்களை அதட்டியபடி இருப்பார்கள். தகுதிக்கு மதிப்புக் கொடுக்கும் இவர்கள் சக ஊழியரைப்பற்றி நன்கு அறிந்திருப்பர். மருந்து, இரும்பு, உரம், இரசாயனம், இரும்பு சம்பந்தமான அல்லது அச்சுத்தொழில் போன்றவை அல்லது தனியார் நிறுவனங்களில் பதவி வகிப்பர், பொறியியல் மின்சாரம் காணி பூமி சம்பந்தமான தொழில்களில் தொடர்பு இருக்கும். மேலும்

(24-ம் பக்கம் பார்க்க)

# ஹேலியின் வால் நட்சத்திரம்

## (HALLEY'S COMET)

— வே. சின்னத்துரை - நல்லூர் —

எமது பண்டைய முனிவர்களாகிய வராஹமிகிரர், கார்க்கி போன்ருேர் பலவிதமான வால் நட்சத்திரங்களைப் பற்றியும் முன்பே கூறியிருக்கிருர்கள். உதலகா என்னும் வால் நட்சத்திரம் 110 வருடத்திற்கொருக்கால் தோன்றுமென்றும், பித்தமகா என்னும் வால் நட்சத்திரம் 500 வருடத்திற்கொருக்கால் தோன்றுமென்றும் காசியப்பசுவேதகேது என்னும் வால் நட்சத்திரம் 11500 வருடத்திற்கொருக்கால் தோன்றுமென்றும், கூறியிருக்கிருர்கள்.

1956க்கும் 1942க்குமிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த வானியலாளராகிய ஹேலி என்பவர் ஒரு சவக்கார உற்பத்தியாளரின் மகனுவார். அவர் பெயராலேயே இந்நட்சத்திரம் அழைக்கப்படுகிறது. 1682ல் தோற்றிய இவ்வால் நட்சத்திரம் மறுமுறையும் 1759ல் தோற்றுமென்று அவர் கூறினுர். துர்அதிஷ்டவசமாக 1759க்கு முன்பே இவர் மரணமானுர். 1759ல் மறுமுறையும் இவ்வால் நட்சத்திரம் அவர் கூறியபடி தோற்றியது. இவர் நியூற்றன் என்னும் விஞ்ஞானியின் சீடராவார்.

வால் நட்சத்திரங்களின் தோற்றம் வருங்கால நிகழ்வுகளைக் குறிகாட்டுகின்றன என்னும் நம்பிக்கை நிலவிவருகின்றது. இதை ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கில நாடகாசிரியர் அழகாக வர்ணிக்கிருர்.

அதாவது பிச்சைக்காரர் இறக்கும்போது வால்நட்சத்திரம் தோற்றுவதில்லை. ஆனுல் அரசகுமாரர் இறக்கும்போது விண்வெளியே பேரொளிமயமாக காட்சியளிக்கும் என்று. வால் நட்சத்திரங்களின் தோற்றத்தால் பிரபல்யமானவர்களின் மரணத்தையும், யுத்தங்களையும் தேசிய அமைப்புக்களின் சிதைவுகளையுமுண்டாக்குமென்பதற்கு பல சான்றுகளுள. வராஹமிகிரர் இவைகளுக்கு கேது என்னும் பதத்தை உபயோகித்திருக்கிருர். வால் நட்சத்திரம் எரிவெள்ளி வீழ்வெள்ளி முதலாய ஒளிருபவையே இப்பதம்குறிக்கும். இவற்றின் தோற்றத்தின் பின் 3 வாரங்களின் பின்புதான் இவற்றின் பலன் நடக்குமென்று கூறுகிருர்கள்.

யூலியர்சீசர் கொலையைத் தொடர்ந்து ரோமராஜ்ய ஆகாயத்தில் 7 நாட்களுக்கு ஒரு பிரபையான ஒரு வால்நட்சத்திரம் தோற்றியதாம்.

கி. மு 1193ல் ஆகஸ்ட் மாதத்தில் மிதுன ராசியில் எகிப்து முழுவதும் தெரியக்கூடிய ஒரு வால்நட்சத்திரம் தோன்றியது. இதைத்தொடந்து அரசன் அமனிமாஸ் காலமானுன்.

கி. மு. 489ல் கிரேக்கர்களால் ஒரு வால்நட்சத்திரம் ஒரு கொய்பு போல் தோற்றமளித்துக் காணப்பட்டது. இது 22 நாட்களுக்கு காணக்கூடியதாகவிருந்தது. இக்காலம் சலாமிஸ் என்ற இடத்தில் கடற் போர் மூண்டது?

கி. மு. 430ல் அதீன்ஸ் நகரத்தில் தீப்போல் சிவந்த நட்சத்திரம் தோற்றியது. இது 75 நாட்கள் நின்றது. பெலப்பொனேசியன் யுத்தம் தொடங்கிற்று.

கி. மு. 371ல் தீராந்திபோல் உருவமுள்ள ஒரு பெரும் வால் நட்சத்திரம் தோற்றியது. இதன் விளைவாக ஆக்கேயாவில் பூகம்பம் உண்டாகியது. அதனுல் பேரழிவு உண்டானது.

கி. மு. 356ல் அடர்த்தியான தாடிபோன்ற ஒரு வால்நட்சத்திரம் தோன்றியது. அப்போது தான் பெரிய அலக்சாண்டர் மகாராஜா அவதரித்தார். பின்பு இது ஒரு ஈட்டிபோன்ற தோற்றமளித்தது.

கி. மு. 134ல் தோற்றிய அழகான வால் நட்சத்திரம் பொன்ரஸ் நகரத்தின் அரசன் மித்திரதாதேற்ஸ் அவதரித்தார்.

கி. மு. 183ல் மீனராசியில் சூரியனளவு பிரபையுள்ள ஒரு வால் நட்சத்திரம் தோற்றியது. ஸ்கிப்யோ ஆபிரிக்கானஸ் உயிர்நீத்தார். பின்பு சீசரின் மரணத்திலும் இது தோற்றியது.

கி. பி. 71ல் கன்னிராசியில் ஒரு வால் நட்சத்திரம் தோன்றியது. ஒரு வாள் போன்ற உரு

வத்தில் எருசலேமின்மேல் தோற்றமளித்தது. ஏப்பிரல் 8-ம் திகதி கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிறில் தோற்றியது. இது ஒருவருடகாலம் நிலைகொண்டிருந்தது. டைற்றஸ் என்பவனால் இந்நகரம் பிடிக்கப்படும்வரை தோற்றியது.

கி. பி. 218ல் மீனராசியில் ஒரு வால்நட்சத்திரம் தோற்றியது; இது 18 நாட்கள் வியாபித்திருந்தது. மாக்கிறிமஸ் என்பவனை ஹெயோகபாலஸ் என்பவன் வென்று ரோமராஜ்யத்தின் சக்கரவர்த்தியானான்.

கி. பி. 323ல் கன்னிராசியில் தோற்றியவால் நட்சத்திரத்தின்போது லுசியானஸ் என்பவனை கொன்ஸ்ரன்ரையின் என்பவன் வென்றான்.

கி. பி. 337ல் மேடராசியில் தோற்றிய வால் நட்சத்திரத்தின்போது கொன்ஸ்ரன்ரைன் மரணமானான்.

கி. பி. 392ல் ரோமாபுரிக்குமேல் ஒரு சிறு பிரபையுள்ள வால் நட்சத்திரம் தோற்றியது. அதே இரவு சக்கரவர்த்தி வலன்ரினியன் தனது சொந்த மாளிகைக்குள் கழுத்து நெரித்துக்கொல்லப்பட்டார்.

கி. பி. 493ல் கன்னிராசியில் தோற்றிய வால் நட்சத்திரத்தால் அலராக்கின் தலைமையில் கொத்ஸ் என்பவர்களால் ரோமாபுரி சூறையாடப்பட்டது.

கி. பி. 423ல் தோற்றிய கோரமான வால் நட்சத்திரம் ரோமர்களுக்கும் பாரசீகர்களுக்குமிடையில் மூண்ட யுத்தத்தைக் காட்டிற்று.

கி. பி. 455ல் தோற்றிய பெரிய வால் நட்சத்திரத்தால் கென்றிக் என்பவனால் ரோமாபுரி சின்னாபின்னமாக்கப்பட்டது.

கி. பி. 539ல் தனுராசியில் தோற்றிய பெரிய வால் நட்சத்திரம் 40நாட்களுக்கு தோற்றியது. இக்காலம் அன்ரியொக் நகரில் ஒருலட்சம் மக்களுக்குமேல் உயிரிழந்தனர்.

கி. பி. 546ல் ஒரு ஈட்டிபோன்ற ஒரு வால் நட்சத்திரம் தோன்றியமையால் கொன்ஸ்ரான்ரிநோப்பிள் என்னும் நகரத்தில் 10,000த்திற்கு மேற்பட்ட மக்கள் தினமும் பிளேக் நோயால் மாண்டார்கள்.

கி. பி. 570ல் தோற்றிய வால் நட்சத்திரத்தால் லொம்பாட்சினரால் இத்தாலி நாடு பிடிக்கப்பட்டது.

கி. பி. 502ல் கொன்ஸ்ரான்ரிநோப்பின் மேல் தோற்றிய வால் நட்சத்திரம் ஒரு வாள்போல் தோற்றமளித்தது, சக்கரவர்த்தி மொறிஸ் கொலையுண்டார்.

கி. பி. 604ல் ரோம் நகரின்மேல் ஒரு மாதத்திற்கு மேலாகத் தோற்றிய பிரகாசமான வால் நட்சத்திரம் பாரசீக யுத்தத்தை தொடக்கி வைத்தது.

கி. பி. 800ல் தோற்றிய வால் நட்சத்திரம் சாள்மக்னேயின் சாம்ராஜ்ஜியம் கைமாறுவதைக் காட்டிற்று.

கி. பி. 814ல் தோற்றிய வால் நட்சத்திரம் அவருடைய மரணத்தை உண்டாக்கியது;

கி. பி. 1106ல் எரிபந்தங்கள் போலவும் தீச்சுவாலை கொண்ட ஈட்டிகள் போலவும் கிரணங்களைக் கொண்ட வால் நட்சத்திரம் கிழக்கே தோன்றியது. இது குரு சேதர்களின் கொடிய யுத்தத்தின் ஆரம்பமாயது.

கி. பி. 1264 யூலையில் இடபத்தில் மூன்று மாதத்திற்கு மேலாக தோற்றமளித்தது. நாலாவது பாப்பாண்டவர் ஏர்பன் மறைந்ததும் இதுவும் மறைந்தது.

1861ல் தோற்றிய வால்நட்சத்திரம் லண்டனில் பெரிய கலவரத்தை உண்டாக்கி அதை யடுத்து புரட்டாதியில் அமெரிக்காவில் உள்ளூர் யுத்தத்தை உண்டாக்கியது;

1456ல் தோற்றிய ஹேலியின் வால்நட்சத்திரம் ஐரோப்பாவில் பெரும் அச்சத்தை விளைவித்தது. மெக்லன்பேர்க் தொடக்கம் டென்மார்க் வரையுள்ள பால்டிக்கடல் பனிக்கட்டியாக உறைந்தது. நேப்பிள்ஸ் நகரில் ஒரு பூகம்பம் உண்டாகி தொடர்ந்து பெருமழையும் வெள்ளமும் அழிவுகளும் உண்டாகி 40,000 மக்கள் உயிரிழந்தனர்.

1531 இதே ஹேலியின் வால்நட்சத்திரம் தோன்றி ஐரோப்பா முழுவதும் புள்ளிக் காய்ச்சல் தோன்றி அதையடுத்து பிளேக் நோயும் பரவியது; எற்ஞளரிமலை தன் அனற்பிளம்பைக் கக்கிற்று. இந்தியாவில் மொகலாயர்கள் தமது உயிருக்காகப் போராடினார்கள்.

மறுபடியும் இவ்வால் நட்சத்திரம் 1605ல் தோன்றி இங்கிலாந்தில் வெடிமருந்து சதியை உண்டாக்கியது. பயங்கரகோர சூறுவளிக்காற்று அமெரிக்க கடற்கரை ஓரங்களைத் தாக்கியது.

1682லும் 1759லும் மறுபடியும் தோற்றி ஐரோப்பா முழுவதிலும் ரோகங்களையும் கொள்ளை நோய்களையும் உண்டாக்கியது.

1910ல் பின்பும் இது தோற்றமளித்தது. அக்காலம் இருந்து சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி 7-ம் எட்வர்ட் மரணமானார். போர்த்துக்கலில் ஒரு புரட்சி கிளம்பியது. 1914ல் முதலாம் உலக யுத்தம் ஆரம்பமாயிற்று.

பின்பும் 85–86ல் தோற்றி இதேபோல் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை உண்டாக்கும். நவம்பர் 85ல் இடபராசியில் கார்த்திகை நட்சத்திரத்திற் கருகில் வருவதை தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கலாம். உலகத்துக்குக்கிட்ட நவம்பர் கடைசியில் அணுகும். மார்கழி 85 லும் தை 86 லும் ஊனக்கண்களால் இதைப் பார்க்க முடியும். பங்குனி சித்திரை மாதமளவில் ஆகாயப்பால் வெளியை விருச்சிகம், தனு முதலிய ராசிகளில் சந்திக்கும். அப்போதும் ஊனக்கண்களால் பார்க்க முடியும். சித்திரையின் பின்பு சூரியகுடும்பத்திற் கப்பால் சென்றுவிடும். பின்பு அது 2061-ம் ஆண்டு மறுபடியும் தோற்றும்.

இடபம், மிதுனம், விருச்சிகம், தனு என்னும் ராசிகளைக் கொண்ட தேசங்களில் பலவித நிகழ்வுகளைக் காணக்கூடியதாகவிருக்கும். இந்திய சுதந்திர சாதகத்தின் இலக்கினம் இடபம். அமெரிக்காவின் இலக்கினம் மிதுனம். சிரியாவின் இலக்கினம் விருச்சிகம். அரேபியாவின் இலக்கினம் தனு. இந்திய சுதந்திர சாதகத்திற்கு இப்போ கேது தெசை நடக்கிறது. கேது இப்போ துலாத்தில் இருக்கிறது. சனி விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறது. ஆகையால் இந்தியா, அமெரிக்கா, மேற்காசியாவை இது வெகுவாகப் பாதிக்கும். கார்த்திகையைத் தாக்கினால் ஒரிசா மாநிலத்தைத்தாக்கி அரசியல் குழப்பத்தை உண்டாக்கலாம். பொதுவாக வால நட்சத்திரத்தின் தோற்றம் ஒரு சக்கரவர்த்தியின் மரணத்தைக் காட்டும். இப்போ சக்கரவர்த்திகள் இல்லாமையால் பிரதமமந்திரிமார், ஜனாதிபதிகள் இவர்களின் மரணங்களை எதிர்பார்க்கலாம். பொதுவாக வால்நட்சத்திரத்தின் தோற்றம் பிரபலமான ஒரு நாட்டின் தலைவரின் மறைவைக் காட்டும். ஜனாதிபதி றீகனுக்கு ஒரு கஷ்டகாலம் ஏற்பட இடமுண்டு. மேற்காசியா நாடுகளின் நிலை ஒரே குழப்பமாகவிருக்கும். இந்திய பாகிஸ்தான், இந்திய சீன எல்லைப் பிரச்சினைகள் சூடுபிடிக்கும். தென்பகுதி கிழக்குப் பகுதியில் உள்ள இந்திய மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்படும். ஈரான் துருக்கி முதலிய நாடுகளைப் பூகம்பம் ஆட்டிவைக்கும்.

வாஷிங்ரனுக்கும் மொஸ்கோவுக்கும் இடையில் பரஸ்பர உறவுகள் குன்றும். ஐரோப்பிய அரசாங்கத் தலைவர் ஒருவர் பதவி இழப்பார். சனியும் செவ்வாயும் ஒன்றாக விருச்சிகத்தில் இருப்பதால் கெடுதிகள் இன்னும் கூடும். நவம்பர் 85க்கும் ஏப்பிரல் 86க்குமிடையில் மேற்கூறிய நாடுகளுக்கு துன்பகாலமாகும். பதவிச் சண்டை, பதவியிலிருக்கும் ஒன்று இரண்டு பேரின் மரணம் இஸ்லாமிய நாடுகளில் இராணுவப் புரட்சி என்பன உண்டாகும்.

29-10-85ல் நடந்த சந்திரகிரகணம் மேட துலா லக்கினங்களைத் தாக்கின. ஆகையால் அந்த லக்கினங்களைக் கொண்ட தேசங்களில் சில தலைவர்களின்மறைவைக்காட்டும், இவ்விலக்கினங்களைக் கொண்ட தனி நபர்களும் எச்சரிக்கையாயிருந்தல் வேண்டும். இலங்கையின் சுதந்திர இலக்கினம் துலாம். தமிழர்களின் இலக்கினம் மேடம். ஆகையால் இருபாலாருக்கும் வில்லங்கங்கள் தோன்றும். அவர்களின் தலைவர்கள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். அப்போது இடபத்தில் லக்கினம் 25 பாகையில் உதிக்கின்றது. லக்கினாதிபதி 5ல் நீசம். 10-ம் அதிபதி சனி யுரேனசோடு சங்கமம். சூரியன் பாபகர்த்தரி யோகமாகிறது. ஆகையால் ஆட்சியாளருக்குள் கஷ்டங்கள் உண்டாவதையும் பாராளுமன்றத்தில் பல மாறுதல்களையும் எதிர்பார்க்கலாம். செவ்வாய், சனி, யுரேனஸ் முதலிய துர்க்கிரகங்கள் இலங்கையின் 10-ம் வீடாகிய விருச்சிகத்தை தாக்கும்போது ஆட்சிமுறையில் பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். அத்துடன் பல கலவரங்களையும் காணலாம். இது தை 23 தொடக்கம் பங்குனி 15 வரை நடக்கும். இதன் பின்பு தமிழர்களின் நிலை நன்றாக இருக்கும்.

---

## குத்துவிளக்கு

பெண்களின் அன்பு, மன உறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத் தன்மை ஆகிய ஐந்து குணங்கள் ஐந்து முகங்களிலும் பிரகாசிப்பது போல் குடும்பப் பெண்கள் பிரகாசிக்க வேண்டும் என்பதுதான் குத்துவிளக்கின் தத்துவம். இதனடிப்படையிலேயே விவாகமாகி மறுவீடு வந்தவுடன் விவாகமான பெண்ணைக் குத்துவிளக்கு ஏற்றச் சொல்லிப் பாலும் பழமும் தருவது வழக்கத்தில் உள்ளது.

எண்சோதிட ரீதியில்

# 1986-ல் உங்கள் பலன்

இ. மகாதேவா, நல்லூர், யாழ்ப்பாணம்.

உலகெங்கும் அபிப்பிராய பேதங்களால் பகைமை அதிகரிக்கும். சீனு, இந்தியா, பிரான்ஸ், கனடா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் அரசியலில் - அரசியல்வாதிகள், தலைவர்களால் பலவிதமான சீர்திருத்தங்கள் முன்னேற்றங்கள் தொழில்நுட்பம், கைத்தொழில் அபிவிருத்திகள் விஞ்ஞான அபிவிருத்திகளால் செழிப்பு ஏற்பட்டாலும் திடீரென அரசியல் வாதிகளுக்கு ஏற்படும் தாக்கம், இழப்புக்கள் மக்கள் மத்தியில் அடிக்கடி பதட்டத்தை ஏற்படுத்தும். இந்தியாவில் பிரபல்யமான சினிமா நடிகர்கள் சிலரின் மறைவுக்கு இடமுண்டு. இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்படும். இயற்கை செயற்கை அழிவுகள் ஏற்படுவதுடன் இந்தியாவின் உதவியால் எமது இனத்திற்கு நிச்சயம் விடிவுஏற்படும். கறைபடிந்த யுத்தமேகம் மத்தியகிழக்கு நாடுகளில், இருள் சூழ்ந்த நிலையை மேலும் மேலும் அதிகரித்தபடி இருக்கும். வடகொரியா - தென்கொரியா தென் ஆபிரிக்கா, உகண்டா, ஆபிரிக்க நாடுகளில் திடீர் புரட்சி, அரசியல் மாற்றம், தலைவர்களின் மாற்றம் ஏற்பட்டபடி இருக்கும். எகிப்து, ருஷ்யா, அமெரிக்கா எல்லாத்துறைகளிலும் முன்னேறிவந்தாலும் மேற்படி இருவல்லரசுகளால் உலகில் பல பகுதிகளிலும் ஆயுதப்போட்டிகள், அழிவுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதை எவராலும் தடுக்கமுடியாது.

1986ல் சனிமாற்றம், வியாழமாற்றம் கிரகச் சேர்க்கைகளால் ஏற்படும் பலனுல் ஆதிக்கஎண் 5,6,9 எண் உள்ளவர்களுக்கு அதிஷ்டகரமான மாற்றங்கள் ஏற்படும். ஆனுல் எண் 2,4ல் ஆதிக்கம் பெற்றவர்கள் மத்திமப்பலனையும் 1, 3, 7, 8 எண்ணுள் வர்களுக்கு கஷ்டபலனையும் கொடுக்கும். எனவே இறுதியில் சொல்லப்பட்ட எண்ணுள்ளவர்கள் சனீஸ்வரனையும், தட்சணுமூர்த்தியையும் உரியமுறையில் வழிபட்டுவரல் வேண்டும். நீங்கள் பிறந்ததிகதியை (பிறப்பு எண்ணை) அடிப்படையாக வைத்து கீழ்வரும் எண்கள் உங்களுக்கு 1986ல் தரும் பலனைக்கணித்து தருகின்றேம்.

**எண் 1** இவர்களுக்கு மிகுந்த போராட்டத்தின் பின்பு காரியங்கள் நிறைவேறும். புதிய மாற்றம் சூழ்நிலை உருவாகும். இதுவரை நீங்கள் எண்ணிவந்த எண்ணங்களில் சிலவற்றில் வெற்றி காண்பீர்கள். அயலவர்கள், உறவினர்கள் அற்ப ஆசையால் உங்களைக்காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். அளவறிந்து நடக்கவேண்டும். அனுவசியமான தலையீடுகளில் உங்கள் சவனத்தைச் செலுத்துதல் வேண்டாம். வெளிநாட்டுச் சந்தர்ப்பங்களை உருவாக்கிச் செல்ல முயற்சிக்கவும் ஒளிமயமான எதிர்காலம் உருவாகும். கிழக்கு மேற்குத்திசை நாடுகளை நாடிப் பிரயாணம் செய்யவும். வெற்றி கிடைக்கும். குடும்பத்தவர்களுக்கும் - உங்களுக்குமிடையில் அடிக்கடி அபிப்பிராய பேதம் ஏற்பட இடமுண்டு.

**எண் 2** உங்களுக்கு தலைக்குமேல் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். பல பலதிட்டங்கள் உருவாக்கிச் செயற்படுத்தத் துடியாய்த் துடிப்பீர்கள். ஓடிவந்த இலட்சுமி வாடி நிற்பாள். வம்பளக்கும் சிலரால் வீண்தொல்லைகள் ஏற்பட்டு மனப் பயத்தைக் கொடுக்கும். திடீரென அதிஷ்டம் அன்னியரின் உதவிகள் கிடைத்தாலும் ''கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை'' ஏற்படும். எதற்கெடுத்தாலும் மத்திமமான பலனை அடைவீர்கள். 1986 ஆகஸ்டுக்குப் பின்பு நற்பலன்கள் அதிகரிக்கும், மேற்குத்திசைகளில் உள்ள நாடுகளை இடங்களை நாடுங்கள். நன்மை அடைவீர்கள்.

**எண் 3** உங்களுக்கு எதிரிகள் பக்கங்களில் இருந்தபடி இருப்பார்கள்: எந்தவிதமான இரகசியங்களையும் வெளிவிடாதீர்கள். உற்றுரையும் உறவினரையும் நம்பிச் செயலில் இறங்க வேண்டாம்; அன்னிய நண்பர்கள் பலவிதமான உதவிகளைச் செய்வார்ர்கள். சகோதரர்களுக்கு நன்மைகரமான பலன்கள் நடக்கும். உடல்நிலையில் அடிக்கடி சுவாத்திய மாற்றங்களால் தாக்கங்கள் ஏற்படும். குடும்பத்தவர்களின் வைத்தியச் செலவு,

அலேச்சல் என்பன சர்வசாதாரணமாகும். புதிய திட்டங்கள், வியாபார நோக்கங்கள், இடமாற்றங்களே மே 1986 வரையும் தாமதப்படுத்தி அதற்குப்பின்பு செயற்படுத்தவும், ஆனல் உறவினரை இவ்விடங்களில் தொடர்புபடுத்தாமல் பார்த்துக்கொள்ளவும்.

**எண் 4** உங்களுக்கு தொழிலிடம், வீடு சம்பந்தப்பட்ட இடங்களில் மாற்றங்கள் ஏற்படும். உங்கள் பொருளில் அவதானமாக இருக்கவும். வெளிநாடு வெளிநாடு எனச்சிலர் ஆசை வார்த்தை காட்டிப் பணம் பறிக்கத் திட்டமிடுவார்கள். திருமணப் பேச்சுக்கள் வெற்றிகரமாக இருக்கும். தொழிலில், கல்வியில் படிப்படியாக நற்பலன்கள் அதிகரிக்கும். மத்தியகிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகளே நாடிப் பிரயாணங்களே மேற்கொள்ளுவதால் எதிர்காலம் நன்ருக அமையும். மண்ணே நம்பினுல் பொன்னைப் பெறுவீர்கள். புதிய நண்பர்கள், பங்காளர்கள் வியாபாரிகளால் நற்பலன்கள் அதிகரிக்கும். துயருக்குப் பின்பு விடிவு ஏற்படும். பொதுவாக மத்திமபலனேத் தரும்.

**எண் 5** உங்களுக்கு புதிய திட்டம், புதிய உருவாக்கங்கள், பலரின் உதவிகள் கிடைக்கும். சகோதரர்கள் நன்மை அடைவார்கள். வெளிநாட்டு வாய்ப்புக்களேத் தேடிக்கொள்ளலாம். ''காலத்தே பயிர் செய்'' என்ற பொன்மொழி பொருந்தும். குடும்பத்தவரின் முன்னேற்றத்திற்காக திடீரெனச் செலவுகள் ஏற்படும். கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், போன்ற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குப் பிரயாணம் செய்வதால் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படஇடமுண்டு. இந்த எண்ணில் பிறந்த அரசியல்வாதிகள் அவதானமாக இருக்கவும். எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்பட இடமுண்டு. ஏனையோருக்கு அதிஷ்டகரமாக 1986-ல் பல நற்பலன்கள் நடைபெறும்.

**எண் 6** உங்களுக்கு அதிஷ்டகரமான வருஷமாகும். புதியவாழ்வு, உருவாக்கங்கள் அன்னிய நாட்டுப் பிரயாணங்கள், தொழில் சம்பந்தப்பட்ட மாற்றங்கள் ஏற்படும். 6ம் எண் ஆதிக்கப்பலனுக இருந்தால் நிட்சயம் நற்பலன்கள் அதிகரிக்கும். ''காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவும்'' பல சந்தர்ப்பங்கள் உருவாகும். தேடிவரும் சீதேவியை எதிர்கொண்டு அழையுங்கள். கடும்உழைப்பு, தொழிற்சிறப்பு அதிஷ்டகரமான குடும்பவாழ்வு திருமணப்பேச்சுக்களில் வெற்றி சகோதரர்களுக்கு நற்பலன்கள் என்பன ஏற்படச் சாத்தியமுண்டு. வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்களுக்கு நற்பலன்கள் நடக்கும். இந்த எண்ணில் பிறந்த பெண்களுக்கு விசேடமான நற்பலன்கள் அதிகரிக்கும். நூற்றுபவர் தூற்றட்டும் உங்களே நீங்களே உணர்ந்து செயற்பட்டு வெற்றியடையுங்கள். விரலுக்கு தகுந்த வீக்கம் போன்று அவரவர் தகுதிக்குத் தகுந்தமாதிரிப் பலனும் நடக்கும். உங்கள் செல்வாக்கைப் பலப்படுத்தி வாழ்வில் முன்னேறிக் கொள்ளுங்கள். இந்த ஆண்டு உங்களுக்கு வெற்றி ஆண்டாகும்.

**எண் 7** உங்களுக்கு இந்த ஆண்டு நல்லதல்ல. நெல்லுக்கு இறைத்தநீர் புல்லேத்தான் வளர்க்கும். விதிவசப்பட்ட பலன் பின்தொடரும். புதிய திட்டங்கள், இடமாற்றங்களே இயன்றளவு தவிர்த்துக்கொள்ளுங்கள். மறைமுகத்தில் உங்களே உங்கள் இனசனங்கள் வசைபாடித்திரிவார்கள். வீட்டிலும் சரி தொழில் இடத்திலும் சரி எதிர்ப்புக்கள் அதிகரிக்கும். தெய்வபக்தியுடனும் சமாதான முறையிலும் வாழத் தெண்டிக்கவும். அரசாங்க உத்தியோகத்தர்கள் நன்மையடைவார்கள். ஆனல் வியாபாரிகளுக்கு அவ்வளவு நல்லதல்ல. உங்களுக்கு நண்பர்களாலும், அயலவர்களாலும் நன்மையுண்டு. சகோதரங்களின் நல்வாழ்வுக்காக அலேச்சல் ஏற்பட்டபடி இருக்கும். ஆகஸ்ட் 1986க்குப் பின் ஓரளவு ஆறுதலுண்டு. தெய்வபக்தியும், பெரியவர்களின் ஆறுதலும் உங்களேப் பலவழியிலும் காப்பாற்றும்.

**எண் 8** உங்களுக்கு நன்மை, தீமை மாறி மாறி நடக்கும். வெளிநாட்டு வாய்ப்புக்களே உருவாக்கிக் கொள்ளவும். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் எந்தவிடயத்திலும் உங்களின் ஊக்கமே வெற்றியைத்தரும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவும். எதிர்ப்புக்கள் சர்வசாதாரணம். மிகவும் இரகசியமாகச் செயற்படவும். விபத்து, ஆபரேஷன் அலேச்சல் ஏற்படலாம். தொழிலிடங்களில் மேலதிகாரிகளுடன் வாக்குவாதப்படாமல் பார்த்துக் கொள்ளவும். சகோதரங்களின் உதவி கிட்டும். அரசியல்வாதிகள் வியாபாரிகள் வெளிநாட்டில் இருப்பது மிகநன்று. பூமியில் விளேவு, லாபம் ஏற்படும். இவ்வருடம் அதிகநன்மையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

(24-ம் பக்கம் பார்க்க)

# தனு லக்ன ஆணும் மிதுன லக்னப் பெண்ணும்

## சேர்வது நன்மையானதா?

வே.சின்னத்துரை — நல்லூர்

தனு ஆண் தமாஷ் நிறைந்தவர். துடிதுடிப்பானவர். தன்னுடன் கூடிய மனிதருடனும் பெண்களுடனும் உண்மையான அன்புடையவர். விசேடமாகப் பெண்களுடன், அவரைக் காதலில் வீழ்த்துவது மிகவும் சுலபம். ஆனால் அக்காதலை நீடித்திருக்கப் பண்ணுவது இலகுவல்ல. மிதுனகாரியில் இவர் கண்விண் தெரியாமல் கவர்ச்சி கொள்வார். அவவுடைய சம்பாஷணை, படிக்குந் தன்மை, கூர்ந்த கவனிப்பு முதலியனவற்றில் இவர் தாமும் பங்குகொள்வார். அவருடைய நோக்கங்களோடு முரண்படத் தக்க சில விடயங்கள் அவளில் மறைந்து கிடக்கிறது. தூலமான விடயங்களில் அவனுக்கு அக்கறையில்லை. சனத்தைப் பொறுத்தளவில் இருவரும் காந்தம்போல் செயல்படுவர். ஆனால் அச்செயல் மிகவும் குறைவாகவிருக்கும்.

தனிப்பட்ட சுதந்திரம் இருவருக்கும் தேவையாயினும் அதை வித்தியாசமான முறைகளில் தேவைப்படும். தனக்கு விரும்பியவிதம் நடக்க சுதந்திரமாக அவனுக்கு எப்போதும் உணர்ச்சி வரவேண்டும். ஏதும் ஒரு அலுவலை தடைசெய்தால் அல்லது கட்டுப்படுத்தினால்தான் அவ்வலுவலை அவள் செய்வாள். பெண்ணின் அவாவை அவன் பூர்த்தி செய்வான். குற்றங்கண்டு தொந்தரவு கொடுத்தல் உண்மையாக அவனைத் துரத்துவதாக முடியும். இருவரும் சந்தித்து பல நாட்கள் சென்றபின்பும் இவன் தனது கவனத்தை அவள்மேல் செலுத்துவான். அவளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தமாட்டார். அவளில் எவ்வளவு ஆழமான அன்பு இருந்தும் பச்சை உண்மையை அவனிடம் சொல்லாவிட்டால் அவனை அது உறுத்தும். அவளுடைய சிநேகிதிகளில் ஒருத்தியில் அவர் கவர்ச்சி கொண்டால் அல்லது இன்னொரு பெண்ணுடன் அவன் சயனித்தால் அதைக்கூட அவன் ஒழிப்பு மறைப்பில்லாமல் அவளிடம் கூறிவிடுவான். இந்த நேர்மைக்கு அவள் மதிப்பளிப்பாள். இது ஒரு அற்புதமான வழிதான்.

இந்த பால் வாழ்க்கை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு சுலபமாக மாறும் தன்மையுள்ளது. இதன்விளைவால் எதுவும் நடக்கலாம். ஒருவார முடிவிற்காக அவர்கள் இன்னொருவருடன் சேர ஒருவரை ஒருவர் விட்டுவிலகலாம். வாலியல் எங்கே அவர்களைக் கொண்டு சென்றாலும் மறுபடியும் இருவரையும் அது ஒன்று சேர்த்துவிடும். இருவருக்குமிடையில் ஒரு வலியஉடல் அழகு கவர்ச்சி ஈர்ப்புண்டு.

இது ஒரு பலவகைப்பட்ட உறவாகும்.

---

1986-ல் உங்கள்... (23-ம் பக்கத் தொடர்ச்சி)

**எண் 9** உங்களுக்கு உற்சாகமான வருடமாகும். புதிய உருவாக்கம், திட்டங்களைச் செயற்படுத்த இடமுண்டு, தொழிலிடத்தில் ஆரம்பத்தில் சிறு சலசலப்புக்கள் ஏற்பட்டாலும் பின்பு நற்பலன்கள் அதிகரிக்கும். உங்களுக்கு ஏற்படும் எதிர்நீச்சலில் வெற்றி பெறுவீர்கள். வீடு, தொழில் இடங்களில் மாற்றங்களேற்படும். சிலருக்கு புதிய அயலவர்கள் அறிமுகமாவார்கள். வடக்கு, மேற்கு திசைகளில் பிரயாணங்களைச் செய்வதால் நற்பலன்கள் கிட்டும். பொருளாதாரத்தில் சாதகமான சூழ்நிலை உருவாகும். வியாபாரிகள், உத்தியோகத்தர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும். புதிய இலாபம், சிறப்பு, பொருள்வரவு என்பன ஏற்படும். உங்கள் செயலில் உறுதிப்பாடாக இருந்து வெற்றியை நிலைநாட்டுங்கள்.

---

அதிஸ்ட எண்... (18-ம் பக்கத் தொடர்)

பௌதீகம் இரசாயனம். ஆராய்ச்சியாளராகவும் போதனை செய்பவர்களாகவும் இருப்பர். ஏதாவது ஒரு கலைத்துறையில் கவனம் செலுத்துவர். பூமியால் விளையும் பொருட்களான மிளகாய் வெங்காயம் போன்றவற்றில் தரகு வியாபாரம் செய்யின் அதிக இலாபம் அடைவர். நாட்டின் தலைவர்களாக போர்வீரர்களாக முப்படையில் அங்கம் வகிப்பவர்களாக இருப்பர். [illegible]ங்க வியாபாரத்தில் சட்டத்துறையில் செல்வத்தைப் பெருக்குவார்கள்.

---

25-1-86ல் ஏற்படும்


# வியாழ மாற்றம்

உங்களுக்கு நன்மையானதா?

அடுத்த இதழை வாசிக்கத்தவறாதீர்கள்!

# ஹலீஸ் வால்வெள்ளியின் தோற்றக்காலப் பாதை

## PATH OF HALLEY'S COMET DURING ITS VISIBILITY




### பட விளக்கம்

○ மேலுள்ள படம் ஆகாய கோளத்தின் ஒரு பகுதியை (150 பாகை முதல் 330 பாகை வரை) காட்டுகிறது.

○ படத்தில் N வடக்கையும், W மேற்கையும், S தெற்கையும், E கிழக்கையும் குறிக்கும்.

○ 0 பாகை எனக்குறிக்கப்பட்ட ரேகை ஆகாய கோளமத்திய (Celestial Equator) ரேகையாகும். இதற்கு விஷு ரேகையென்றும் பெயருண்டு. இது எமது பூமத்திய ரேகைக்குச் சமாந்தரமாக ஆகாயத்திற் கற்பிக்கப்படும் ஓர் ரேகையாகும்:

○ 10° 20° 30° 40° 50° என இருபக்கமும் குறிக்கப்பட்ட ரேகைகள் கிராந்தி விருத்த ரேகைகளாகும்; (Declination Circles) இவை பூமியின் அக்ஷரேகைகளுக்கு ஒத்தவகையில் வானத்திலிருப்பதாகக் கருதப்படுவனவாகும்.

○ பூமியில் தீர்க்கரேகைகள் போன்று படத்தில் அமைந்துள்ள ரேகைகள் துருவ (Right Ascension - R. A.) ரேகைகளாகும். இவை கீழ்புறத்தில் X—XXII என மணிக்கணக்கிலும் மேற்புறத்தில் 150—330 என பாகைக் கணக்கிலும் குறிக்கப்பட்டுள்ளன.

○ வால்வெள்ளியின் பாதை தடித்த இடைவெளிக் கோட்டினாலும், செல்லும் திசை அம்புக்குறியினாலும் காட்டப்பட்டுள்ளன; பாதையில் வால்வெள்ளி அடையாளமிட்ட இடங்களில் திகதியும் குறிக்கப்பட்டுள்ளன.

○ படத்திலுள்ள முக்கிய ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பெயர்கள்: Aquarius கும்பம், Capricornus மகரம், Sagittarius தநு, Scorpius விருச்சிகம், Libra துலாம், Virgo கன்னி, Antares கேட்டை, Spica சித்திரை;

## "வால் வெள்ளி" பட உபயோகக் குறிப்புகள்

○ இரண்டு வருடங்களுக்கு முன்னே சக்திவாய்ந்த தொலைநோக்கியால் காணப்பட்டாலும், கண்ணுக்குத் தெரியக்கூடிய நிலையை 26-12-85-ல் அடைகிறது. அப்பொழுது அதன் ஒளிவகுப்பு 6 ஆக இருக்கும். நமது கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் காணப்படும் மிகச்சிறிய நட்சத்திரங்களே இந்த ஒளிவகுப்பைச் (Magnitude) சேர்ந்தன. அது 5-வது ஒளிவகுப்பையடையும்போது சிறிது ஒளி கூடியும் 4-வது ஒளிவகுப்பையடையும்போது மேலும் சிறிது ஒளி கூடியும் காணப்படும். இணைநோக்கி (Binocular) மூலம் சிறிது தெளிவாகவும் தொலைநோக்கி மூலம் (Telescope) மிகத் தெளிவாகவும் பார்க்க முடியும். சில திகதிகளும் வால்வெள்ளியின் ஒளிவகுப்பு நிலையும் வருமாறு: ஜன 1 — 5.9 ஜன 30 — 4.2 பெப் 29 — 4.2 மார் 31 4.1 ஏப் 15 — 4.3 ஏப் 30 — 6.0

○ ஹலீஸ் வால்வெள்ளி 5-9-86-ல் சூரியனுக்கு மிகச்சமீபமாக நீசோச்சரேகை (Apseline) உச்சநிலை (Perihelion) அடைவதால் அதற்குச் சில நாட்கள் முன்னும் சில நாட்கள் பின்னும் அதனைப் பார்க்கமுடியாது.

○ படம் தென்கோளார்த்தத்தைக் காட்டுவதால் படத்தை உபயோகிக்கும்போது தென்முகமாக நின்று படத்தைத் தலைக்குமேல் கவிழ்த்துப் பிடித்து தென்வானத்துடன் ஒப்புநோக்கி வால் வெள்ளியின் நிலையை அறியவேண்டும்.

○ யாழ்ப்பாணம் வட அட்சம் 10°யில் இருப்பதால் குறித்த ஒரு தென் கிராந்தியிலிருக்கும் (South Declination) வால்வெள்ளியின் சரிவை (Zenith distance) எமது அட்சத்தையும் வால்வெள்ளியின் தென் கிராந்தியையும் கூட்டுதல் மூலம் அறிந்துகொள்ளலாம், உதாரணம்: 11-3-86ல் வால் வெள்ளியின் தென் கிராந்தி 20° உடன் 10° அட்சத்தைக் கூட்ட சரிவு 30° ஆகிறது.

○ கிரகங்கள் வானில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்கின்றன. ஆனால் ஹலீஸ் வால் வெள்ளி கிழக்கிருந்து மேற்குநோக்கி எதிர்த்திசையில் ஆனல் வேறு பாதையில் செல்கிறது.

○ ஜனவரி 1ல் சூரியன் அஸ்தமனமானபின் மேற்குவானில் 52° உயரத்திலும் ஜனவரி 10ல் 38° உயரத்திலும் வால்வெள்ளி மிகச்சிறிய நக்ஷத்திரமாகத் தோற்றலாம்.

* ஏனைய மாதநிலைகள் சோதிடமலரில் அடுத்தமாதங்களில் வானியற்காட்சிகள் என்ற பகுதியில் தரப்படும்.

விசேட குறிப்பு: இம்மலரில் வந்துள்ள படம் மிகச்சிறிதாய் இருப்பதினால் 62செ.மீ X 16செ.மீ பரிமாணமுள்ள நிழல் நிலைப்படம் (Photo Stat) வேண்டுவோர் திருக்கணித நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும். படம் விலை: ரூபா 4/- (தபாற் செலவுடன்)

---

இம்மாதம் உங்களுக்கு ... (16ம் பக்கத்தொடர்ச்சி)

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் லாபம் கிட்டும். வியாபாரம் முன்னேற்றம் காணும். வங்கி நிதி வசதிகள் திருப்திகரும். பவுண், இயந்திரம், மருந்து வகை வியாபாரிகள் கூடிய லாபமடைவர்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும், பதவிச் சிறப்புக்களும் கிட்டும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்பும், பதவியுயர்ச்சியும் பதவி உறுதிப்படுத்தலும் கிட்டும்.

விவசாயிகளுக்கு விளைவுகள் கணிசமான அளவு அதிகரிக்கும். பயிர் உற்பத்தியும் வளர்ச்சியுறும். மானியம் முதலிய உதவிகளும் அவ்வப்போது கிட்டும்.

தொழிலாளருக்கு வேலை வசதிகள் அதிகரிக்கும். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் காணும். தொழில் பிணக்குகள் சுமுகமாகத் தீர்க்கப்படும். நாட்சம்பளக் கூலியாட்களுக்கும் வாழ்க்கைக்கேற்ப வேலைவசதி கிட்டும்.

மாணவர் கல்வித்தேர்ச்சி குறிப்பிடக்கூடிய அளவில் வளர்ச்சியுறும். ஆசிரியர்-மாணவர் உறவில் நன்மையுண்டு. சட்டத்துறை, கணிதத் துறை மாணவர்கள் விசேட சித்தியடைவர்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகளில் முட்டுக்கட்டைகள் ஏற்படும். காதல் விவகாரங்களும் கேள்விக்குறியிலேயே தொடரும். குடும்பப் பெண்களுக்கு குடும்பச்சச்சரவுகள் கவலையளிக்கும்.

அதிஷ்டநாட்கள்: டிச 19,20,23,25,29,30 ஜன.6 இரவு 7,8,11,12

துரதிஷ்டநாட்கள்: டிச. 16இரவு 17,18,31பகல் ஜன.1,2பகல் 5,6 பகல், 13.

இலங்கை சோதிட ஆய்வு மன்றம் நடத்தும்

# சோதிடக்கலைப் பயில்நெறி

## ஆரம்பம்: ஜனவரி 1986

தகுதியும் அநுபவமும் மிக்க ஆசிரியர்கள் கற்பிக்கவுள்ளனர்

1. பாடத்திட்டம் அ. வானியலும் புவியியலும்
   ஆ. ஜாதகக் கணிப்பு
   இ. பலன் அறிமுறை

2. காலஎல்லை: 18 மாதங்கள்

   முதற் பன்னிருமாதங்களில் வானியலும் புவியியலும், ஜாதகக்கணிப்பு என்பன கற்பிக்கப்பட்டுத் தேர்வு நிகழும். தேறியவர்களுக்கு ஆறுமாதகாலம் பலன் அறிமுறை பயிற்றப்படும். இது அநுபவமிக்க சோதிடர் ஒருவரோடு உடனுறைந்து பயில்வதாக அமையும். ஈற்றில் அதில் தேர்வு நிகழும்.

3. பெறுபேறு: சித்தி எய்தியவர்களுக்குச் சோதிடக்கலைமணி என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

4. வகுப்புக்கள்: இப் பயில்நெறிக்கான வகுப்புக்கள் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஸௌஜன்ய மண்டபம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம் ஆகியவற்றில் நிகழவுள்ளன. விண்ணப்பிப்போரின் தொகையைக் கருத்திற் கொண்டு ஏனைய ஊர்கட்கும் வகுப்புக்கள் விஸ்தரிக்கப்படும். வாரத்தில் இருதினங்கள் வகுப்புக்கள் நடைபெறும்.

5. கட்டணம்: மாதம் ரூபா **25/-**

6. விண்ணப்பத்தகுதி: 25வயதிற்குட்பட்டவர்களின் குறைந்தபட்சக் கல்வித் தகைமை க. பொ. த. சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல். 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் யாவரும் விண்ணப்பிக்கலாம்.

7. விண்ணப்ப முடிவுத்திகதி: 1985-12-31

   விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் முழுப்பெயர், முகவரி, கல்வித் தகைமை, வயது என்பவற்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். விண்ணப்பங்களுடன் சுயமுகவரி இடப்பட்டதும் 75 சத முத்திரை ஒட்டப்பட்டதுமான 9''×4'' அளவு கடிதஉறை இணைக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி:

எஸ். எஸ். நடராஜா, (செயலாளர்),
இலங்கை சோதிட ஆய்வுமன்றம்,
திருத்தணிகை, ஆடியபாத வீதி, நல்லூர்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 42

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. மேல்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபா லட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-1-1986க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப் படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 42
சோதிடமலர்
கைதடியில் .... சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச 1 | 2 | த 3 | 4 | 5 | ம் 6 |
| 7 | தே 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | ச 15 | 16 | ம் 17 | ■ |
| ப 19 | 20 | 21 | ன் 22 | 23 | 24 |
| ■ | சா 26 | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | ■ | 34 | 35 | கை 36 |

பெயர் ..............................................................

விலாசம் ..............................................................

..............................................................

**இடமிருந்து வலம்**

1. சூரிய விம்பத்தை புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் குறுக்காகத் தாண்டிச் செல்லும் காட்சி இது.
7. எமது ஒரு வருடகாலம் இவர்களுக்கு ஒருநாள் பொழுதிற்குச் சமனுகும். குழம்பிவிட்டது.
11. இவர் இராசிமண்டலத்தை ஒருமுறை வலம் வரஎடுக்கும் காலமே ஓர் வருடம் எனப்படும்.
13. குழம்பியிருக்கும் இது 'சகவருடம்' எனவும் பொருள்படும்.
19. திருமாலின் திருநாமங்களுளொன்று மறைந் துள்ளது. [குழம்பியுள்ளது.
26. கிரகங்களின் நிலைகளை இவ்வாறு கூறுவர்.
31. குருபகவான் ஆட்சிபெறும் வீடு முதலெழுத் தின்றியுள்ளது.
34. இந்தியாவிலுள்ள புனித நதிகளுள் ஒன்று

**மேலிருந்து கீழ்**

1. கிரகநிலையில் ராகுகேதுக்களுக்கு ஓர்புறத்தில் எல்லாக் கிரகங்களுமிருப்பதினுல் ............ யோகம் ஏற்படுகிறது.
2. சோதிடத்தில் சுயதேசத்தினின்று இஷ்டதே சத்துக்குள்ள தூரம் குழம்பியிருக்கின்றது.
3. சூரியன் மேட, இடபராசிகளில் சஞ்சரிக்கும் காலம் குழம்பியுள்ளது.
5. எட்டாம் பாவத்தின் பிரதான காரகங்களு ளொன்று ஒளிந்துள்ளது.
6. தலைகீழாயுள்ள இதனிடையே ஒரெழுத்தை யிட 'நஞ்சு' ஆகும்.
16. குறித்த ஓர் அம்சத்திற்கு அதிபதியாயிருக்கும் கிரகத்தை அவ்வம்சத்திற்குரிய ......... என்று கூறுவர். குழம்பிவிட்டது.
24. வண்ண விளக்குபோல் வானில்ஜொலிப்பதிது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 41ன் விடைகள்**

இடமிருந்து வலம்:
1. பஞ்சாம்சம் 7. சக 10. புத்தி 13. வரம் 17. (கூ)டல் 19. தற்பரை 25. கவிதை 29. ராகு 33. உருவம்

மேலிருந்து கீழ்
1. பகவற்கீதை 2. பஞ்சகம் 4. தி(ன)ம் 5. புசல் 6. உத்தராடம் 15. விரதம் 29. குரு

**பரிசு பெறுவோர்:**

1-ம் பரிசு: தி. முருகதாசன் "அம்பிகைவாசா" ஏழாலை மேற்கு—ஏழாலை

2-ம் பரிசு: ஆ. க. கதிரேசன் "லக்ஷ்மி வாசம்" வதிரி.

3-ம் பரிசு: திருமதி ஆர். மோகனமுகுந்தன் டச்சு வீதி, சங்குவேலி—மானிப்பாய்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.




## மில்க்வைற் நீலசோப்

சம்பூரண சலவைக்கு மில்க்வைற் நீலசோப்பை வாங்கி உபயோகியுங்கள். உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீல சோப் புதிய விலை ரூபா. 2/- மட்டுமே.

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி 1 மில்க்வைற் செய்தி அல்லது 1 காயத்திரி மந்திரத்துடன் கூடிய காயத்திரி படத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

**1986 ம் ஆண்டுக்கான**

# திருக்கணித பஞ்சாங்க

## மாதக்கலண்டர், டயறிகள்

**வழமைபோல் சகல அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.**

கலண்டர் விலை ரூபா 12-00

டயறி விலை ரூபா 17-00 பிளாஸ்டிக்கவருடன் 20-00

எல்லா ''சோதிடமலர்'' வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விபரங்களுக்கு;

திருக்கணித நிலையம்

மட்டுவில் — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280